பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 26 வியாழக்கிழமை (10.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 225

# அரச ஊழியரின் வேலை நிறுத்தம் இன்று

# அத்தியாவசிய சேவைகளும் முடங்கும்

## குழப்புவதற்கு அரசு பிரயத்தனம்; தொழிற்சங்கங்கள் விடாப்பிடி

கொழும்பு, ஜூலை 10

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கண்டித்தும், சம்பள உயர்வு உட்பட முக்கிய பல கோரிக்கைகளை முன்வைத்தும் அரச பணியாளர்கள் இன்று நாடளாவிய ரீதியில் பொது வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கின்றனர்.

நேற்று நள்ளிரவில் இருந்து வேலைநிறுத்தம் நடைமுறைக்கு வந்ததாக சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் நேற்று மாலை 6 மணிக்கு உத்தியோகபூர்வமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டன.

இன்றைய வேலைநிறுத்தத்தில் பல துறைகளையும் சேர்ந்த 366 தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்களான சுமார் 2 இலட்சம் பணியாளர்கள் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சாரம், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி உட்பட அரசதுறை சார்ந்த சகல அடிப்படைச் சேவைகளும் இன்று இடம்பெறா என்று இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருக்கும் தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிவித்திருக்கின்றன.

தமது போராட்டத்தை குழப்புவதற்கு அரசுத் தரப்பினர் கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றனர் என்று குற்றஞ்சாட்டி யிருக்கும் தொழிற் சங்கங்கள், என்ன தடை வந்தாலும் இன்றைய போராட்டத்தை தாங்கள் நடத்தியே தீருவார்கள் என்று விடாப்பிடியாக நிற்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு

வவுனியா, ஜூலை 10

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு கரையோரப் பகுதிகள் மீது நேற்றுக்காலை 7.30 மணிக்கும் 9 மணிக்கும் இருதடவைகள் விமானப் படையினரின் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின. அதில் மீனவர்களின் எட்டுப்படகுகளும் ஐந்து வீடுகளும் சேதமடைந்தன.

எனினும் இந்தச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள், கடற்றொழிலாளர்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது (சி)

## சிலாபத்தில் தேடுதல் ஆறு தமிழர்கள் கைது

கொழும்பு, ஜூலை 10

சிலாபம், முந்தல், கரிக்கட்டு வீதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்தின்பேரில் ஆறு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தத்தைத் தடுத்தால் அரசின் கதை இன்றோடு காலி!

### நாடாளுமன்றில் ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 10

"இன்றைய வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தவோ இடையூறு செய்யவோ அரசும், படைகளும் முயன்றால் இந்த அரசுக்கு இன்றைய நாள்தான் கடைசி நாள். இன்றோடு அரசைக் காலி செய்து வீட்டுக்கு அனுப்பி விடுவோம்"

-இப்படி நேற்று நாடாளுமன்றத்தில் எச்சரித்தது ஜே.வி. பி.

தமது தொழிற்சங்கங்களின் பிரதான பங்களிப்புடன் இன்று நடக்கும் நாடுதழுவிய பணிப் புறக்கணிப்புப் போராட்டத் தில் சகலரும் ஒன்று திரண்டு பங்கேற்கவேண்டும் - என்றும் அந்தக் கட்சி அழைப்பு விடுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த நடவடிக்கையையும் எடுக்க அரசு தயங்காது!

### அமைச்சர் ரம்புக்வெல சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 10

"அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டப்பேரணிகள் நடத்தப்படுமாயின் அதற்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்க அரசு தயங்காது"

- இவ்வாறு தேசிய பாதுகாப்பிற்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் தெற்கில் ஊடுருவி அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் தொடர் ஷெல் வீச்சு கல்விச் செயற்பாடுகள் சீர்குலைவு!

கிளிநொச்சி, ஜூன் 10

படையினரின் ஆட்லறி ஷெல் தாக்குதலினால் முல்லைத் தீவு மாவட்டம் பாண்டியன்குளம், மாந்தை கிழக்கு, துணுக்காய்ப் பகுதிகளிலுள்ள 18 பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் செயலிழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

படையினர் மாந்தை கிழக்குப் பகுதியை இலக்குவைத்துத் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை நடத்திவருகின்றனர்.

இத்தாக்குதலால் பாண்டியன் குளம், துணுக்காய் பகுதி மக்கள் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். இதன் காரணமாக மாந்தை கிழக்குப் பகுதியில் 13 பாடசாலைகள் ஏற்கனவே செயல் இழந்திருந்தன. இந்நிலையில் துணுக்காய் பகுதியில் 5 பாடசாலைகளில் கல்விச் செயற்பாடு முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் தேடுதல்; மீனவர் கைது

கொழும்பு, ஜூலை 10

மன்னார், பள்ளிமுனைக் கடற்கரைப் பகுதியில் படையினர் நேற்றுக் காலை 6.15 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை மேற்கொண்ட சுற்றி வளைப்புத் தேடுதலின் போது டெட்டனற்றர்களை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சுற்றி வளைப்புத் தேடுதலின் போது மீனவர்கள் எவரையும் தொழிலுக்குச் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை என்றும் - இதனால் நூற்றுக்கணக்கான மீனவர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்குக் குறைந்தளவு பொருள்கள்; மனிதாபிமான நெருக்கடி அதிகரிக்கிறது

கொழும்பு, ஜூலை 10

வன்னிக்குள் அனுமதிக்கப்படும்பொருள்களின் அளவை இலங்கை அரசு மட்டுப்படுத்தியிருப்பதால் அங்குள்ள மக்கள் எதிர்நோக்கியுள்ள மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பது கடினமாகியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் தொண்டு அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

வடக்கு, கிழக்கில் செயற்படும் ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புகளும், பிரதான அரச சார்பற்ற அமைப்புகளும் அப்பகுதியின் மனிதாபிமான நிலைமை குறித்து வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையிலேயே இவ்விடயம் விவரிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இராணுவ நடவடிக்கை, பரஸ்பர தாக்குதல்கள் காரணமாக நிலைமை தொடர்ந்தும் பதற்றமானதாகவும் நிச்சயமற்றதாகவும் காணப்படுகின்றது.

விமானத் தாக்குதல்கள் இப்பகுதியில் சாதாரண விடயமாகிவிட்டன.

ஜூன் 29ஆம் திகதி இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் துணுக்காய் உதவி அரச அதிபர் கொல்லப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்பாளர் விவரப்பட்டியலை 25 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.குடாநாட்டில் குடியிருப்பாளர்களின் விவரங்களைப் பொலிஸார் திரட்டிவருகின்றனர். கிராம சேவையாளர்கள் ஊடாக இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன.

இலங்கை அவசரகாலச் சட்டத்தின் பிரிவு 23 இன் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடியிருப்பாளர் விவரங்கள் திரட்டும் விண்ணபப்படிவங்கள் கிராம சேவையாளரிடம் வழங்கப்பட்டுள்ளன. குடாநாட்டில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தத்தமது கிராம சேவையா ளரிடம் அந்த விண்ணப்பங்களை பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். பிரதான குடியிருப்பாளரின் விபரம், குடும்ப அங்கத்தவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார் ரவூப் ஹக்கீம்

### நாளை எம்.பி.பதவியை ஏற்கிறார்

கொழும்பு, ஜூலை 10

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

முன்னர் திட்டமிட்டிருந்தபடியே இந்த ராஜினாமா செய்யப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சபைத் எதிர்க்கட்சித்தலைவர் பதவிக்கு பசீர் சேகு

(12 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9பேருக்கு 2 லட்சம் அபராதம்

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேருக்கு மல்லாகம் நீதிமன்றம் 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

மானிப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இந்த 9 பேரும் நேற்றுப் புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களில் நால்வரை தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் ஐவரை தலா 30 ஆயிரம் ரூபா வீதமும் அபராதமாகச் செலுத்து மாறு மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

கட்டுடை, சங்குவேலி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு மானிப்பாய் பொலிஸார், இராணுவத்தினர், இலங்கை மின்சார சபையின் சுன்னாக அலுவலக அதிகாரிகள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சட்ட விரோத மின்சாரம் பெற்ற இந்த 9 பேரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (1-50)



## கண்ணீர் பூக்களால் அஞ்சலிக்கின்றோம்

யாழ்:மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்
சி.சிவகுமார் அவர்களின்
பாசமிகு தாய்

**திருமதி சிவபாதம் இராசம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கமக்கார அமைப்புக்கள், (76148)
மட்டுவில் வடக்கு, கிழக்கு, சரசாலை வடக்கு, தெற்கு.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி குமாரசாமி



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி அன்னலட்சுமி 07.07.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் குமாரசாமி (ஆசாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தையா - ராசலட்சுமி (அமரர்) தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தம்பு - சின்னத்தங்கம் (அமரர்) தம்பதியரின் மருமகளும் நடுவில், தங்கம், யோகம், ரத்தினம், அருள், நந்தன், குட்டி ஆகியோரின் சகோதரியும் ராசம்மா, கனகம்மா, துரைச்சாமி, கந்தசாமி (அமரர்), ஆகியோரின் மைத்துனியும் பாமா, நவநீதன், ஜெகந்தன், பமிலா, பாமதி ஆகியோரின் பாசமிகு தாயும் நா.ரவீந்திரன், அருந்ததி, பிரியதர்ஷனி, ரவீந்திரன், சாந்தரூபன் ஆகியோரின் மாமியும் றஜீனா, பமிர்ஷன், நிதுஷன், ஆகாஷ், வைஷிகா, மனோஜன், பமிஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2008) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் களனிபுர மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் புஞ்சிபொறளை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.குமாரசாமி (கணவர்).
காளிகோயிலடி,
தாவடி வடக்கு,கொக்குவில். (76145)

### கோவிந்தன் இரத்தினசிங்கம்



வேலணை, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தன் இரத்தினசிங்கம் 08.07.2008 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் (சின்னமணி) அன்புக் கணவரும் சுபாஸ்கரன் (சுவிஸ்), விமல்தாசன், கமலதாசன், வத்சலா, சவுந்தன், ஜெயந்தினி, நிஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கேஸ்வரி, தேவி, ராணி, செல்வி, செல்வரத்தினம் காலஞ்சென்ற பவளம், செல்லத்துரை ஆகியோரின் சகோதரரும் சிவகுரு, பழனிவேல், தவமணிதேவி, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகாஜியினி, மணி, சிவகுமார் ஆகியோரின் மாமனாரும் விஜய், சயித்தனா, தனுஷ் அஜய், கீருத்திகா, கீர்த்தனா, ஷாணு ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2008) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முனியப்புலம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பம்,
காால்(மகன்).
முதலாம் வட்டாரம்,
வேலணை.

### திருமதி ஞானப்பூங்கோதை தியாகராசா



நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானப்பூங்கோதை தியாகராசா நேற்று (09.07.2008) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினமயில்வாகனம் – பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் ஆசைப்பிள்ளை காலஞ்சென்ற அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் தியாகராசாவின் (முகாமையாளர், D.S.I., Ranpa - யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் கெங்காதரனின் அருமைத் தாயாரும் திருமதி புஸ்பராணி, மகாதேவன்,சிறிறதன் (U.K.) செல்வி சத்தியசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2008) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.தியாகராசா (கணவர்).
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில். (76162)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்பில் கணக்கீடு, வணிகக் கல்வி ஆகிய பாடங்களை போதிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை இடம்றெவிருந்த செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1)

## மென்பொருள் இறுவட்டை இன்று கையளிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை10

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட அனைத்துப் பாடசாலைகளும் மென்பொருள் போட்டிக்குத் தயாரித்த இறுவட்டுகளையும் இன்று வலய கல்வி அபிவிருத்தி பிரிவில் கையளிக்கும்படி வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## நெல்லியடியில் இருதினங்கள் சுகாதார விழிப்புணர்வு கண்காட்சி

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை வெளிப்படுத்தும் வகையில் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 8.30மணி முதல் பிற்பகள் 4மணி வரை இடம்பெறும் இக்கண்காட்சியை பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் பார்வையிட்டு பயன்பெறுமாறு பருத்தித்துறை சுகாதார வைத் திய அதிகாரி கேட்டுள்ளார். (1)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, ஜூலை 10

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 15வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 9 மணிக்கு அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் மோதவுள்ளன. (1-86)

## சங்கானையில் இளம் குடும்பஸ்தரை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

சங்கானை, நிற்சாமத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூலித்தொழிலாளியான ரட்ணசிங்கம் ஸ்ரீபன்கெஜி(வயது 22) என்பவரே காணாமற்போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டிலிருந்து அவர் புறப்பட்டார் என்றும் அதன் பின்னர் அவர் குறித்துத் தகவல் இல்லை என்றும் அவரது தாயார் தனது முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார். (1-25)

### தவறிவிட்டது

0779176273 தொலைபேசி இல. Sony Eriction (K 800 I) கையடக்கத் தொலைபேசி இணுவில், மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லிங்கம் தொலைத்தொடர்பு நிலையம்
ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் வீதி, இணுவில். தொ.பே.இல.: 2225942, 7743

### தவறிவிட்டது

மருசலின் சுரேந்திரன் என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை (731722404V), சாரதி அனுமதிப்பத்திரம்,மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் வங்கி அட்டை (A.T.M. காட்) என்பன அடங்கிய கைப்பை (பேஸ்) யாழ்ப்பாணத்திற்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் (கே.கே. எஸ். வீதியில்) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பிராந்தியக் காரியாலயம் என்னும் முகவரியில் அல்லது 021 222 2033 என்னும் தொலைபேசி [illegible] வழங்கப்படும்.

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

**பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்**

அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019) தொடர்பு கொண்டால் அவர்களுகேற்றவாறு மருந்துகளை கொண்டுவருவார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம்,நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**Sexual Disorders(ஆண்மைச் சக்தி குறைவு)**

(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்தவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். குறிப்பு-15.07.2008 தொடக்கம் 21.07.2008 வரை யாழ்ப்பாணத்தில் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரியில் இருப்பார்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன்
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.Contact No.: 0777 569205

## திருமண அறைப்பு

செல்வன் சி.தர்மசிலனுக்கும்
செல்வி அ.ஜெயமிதுலாவுக்கும் 16.06.2008
நடைபெறவிருந்த திருமணம் 14.07.2008 திங்கட்கிழமை
சங்தரத்தை இந்து வாலிபர் சங்க கல்யாண மண்டபத்தில்
மு.ப. 10.22 தொடக்கம் 11.58 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்
நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

திருமதி ம.சிவபாதசுந்தரம்
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.(76140)

திரு.திருமதி அழகரத்தினம்
பிள்ளையார் கோயிலடி,மாதகல்.

## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம் பதவி வெற்றிடம்

கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு 18–45 வயதுக்குட்பட்ட வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சங்கத்தினால் கோரப்படும் பிணையைச் செலுத்த வேண்டும்.

சாரதி: 312/13

சம்பள அளவுத் திட்டம் $\frac{9950 - 11700}{85 \times 10 - 90 \times 10}$ (சுற்று நிருபம் 66/2006)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ) 5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்/லொறி/ட்ரெயிலருடன் டிராக்டர் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

குறிப்பு: சிங்கள மொழி பேச தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பப்படிவங்களை எமது சங்க காரியாலயத்தில் பெற்று விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கைதடி என்ற முகவரியிட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் பதவியினை பெயர் குறிப்பிட்டு 25.07.2008 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

பதில் பொது முகாமையாளர்,
தென்மராட்சி மேற்கு
(சி-55694) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி.

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலய மனைப் பொருளியல் ஆசிரியை செல்வி சுசிலாராணி முருகேசு அவர்களின் அன்புத்தாய்

**திருமதி தங்கம் முருகேசு**

அவர்கள் 23.06.2008 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (76147)

மனைப்பொருளியல் ஆசிரியர் சங்கம், வலிகாமம் கல்வி வலயம்.

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 * 07 * 1966



மறைவு 04 * 07 * 2006

**அமரர் கோபாலபிள்ளை விமலதாசன்**

(நில அளவைத் திணைக்களம், வவுனியா)

வெள்ளை உள்ளம் படைத்த எங்கள் அன்பு அப்பாவே!
ஈராண்டு ஆனாலும்- எம் ஈரவிழிகள் காயவில்லை
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்க முடியாது உங்கள் அன்பை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (76142)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு விவசாயிகள் தமது உற்பத்திகளை தென்னிலங்கையில் சந்தைப்படுத்த நடவடிக்கை

## யாழ். தேசவள விவசாயிகள் சம்மேளனம் முன்னெடுக்கவுள்ளது

மானிப்பாய், ஜூலை10

குடாநாட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பணப்பயிர் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளை தென்பகுதியில் சந்தைப்படுத்துவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைத் திருநெல்வேலியில்அமைந்துள்ள யாழ். தேசவள விவசாயிகள் சம்மேளனம் முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பாக சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் தகவல் தருகையில்,

ஏ-9 பிரதான வீதி மூடப்பட்டதால் விவசாயிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டனர். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பணப்பயிர் உட்பட சகல விளை பொருள்களும் போதியளவு சந்தை வாய்ப்பின்றி முடங்கிப் போயுள்ளன. இதனால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக மட்டுமின்றி உள ரீதியாகவும் பெரும் பாதிப்பை அடைந்துள்ளனர். இந்நிலையை- விவசாயிகளின் பாதிப்பை - கருத்தில் கொண்டு குடாநாட்டில் உள்ள 14 கமநல சேவைகள் நிலையத்திலிருந்தும் தலா இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு யாழ். தேசவள விவசாயிகள் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச் சம்மேளனம் விவசாயிகளின் உற்பத்தியைத் தென்பகுதியில் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

உற்பத்தியாளர்கள் இவ்விடயம் குறித்து எமது சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்-என்றார். (202-95)

# தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.வலயம் முதலிடம்

வலி.வடக்கு, ஜூலை 10

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்மொழித்தினப் போட்டியில் யாழ்.கல்வி வலயம் அதிக இடங்களை வென்று முன்னணியில் உள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலயம் 19 முதல் இடங்களையும் வலிகாமம் கல்வி வலயம் 16 முதல் இடங்களையும் வடமராட்சி கல்வி வலயம் 8 முதல் இடங்களையும் தென்மராட்சிக் கல்விவலயம் 5 முதல் இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன. (202-86)

# யாழ்.ஸ்ரான்லி வீதியில் குறுக்குப் பாதையில் போக்குவரத்திற்கு மீண்டும் அனுமதி

யாழப்பாணம், ஜூலை 10

யாழ்.ஸ்ரான்லி வீதியையும் மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதி பொதுமக்களின் போக்குவரத்திற்கு மீண்டும் திறந்து விடப்பட்டுள்ளது.

இக் குறுக்கு வீதி கடந்த சில மாதங்களாகப் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டிருந்தது. மீண்டும் கடந்த சில தினங்களாக வீதி திறக்கப்பட்டு போக்குவரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை- ஸ்ரான்லி வீதிக்குச் செல்வதற்கு வின்ஸர் சந்தியில் போடப்பட்டிருந்த வீதித் தடையும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அகற்றப்பட்டது. (202-302)

# சாவகச்சேரி, நல்லூர் பிரதேச சபைகளின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 10

2008 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு குடாநாட்டின் சகல பிரதேச சபைகளும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருகின்றன.

### சாவகச்சேரி பிரதேச சபையில்...

சாவகச்சேரி பிரதேச சபையின் உப அலுவலகங்களான கச்சாய், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய அலுவலகங்களில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

* உப அலுவலகங்களுக்கிடையே உள்ள முன்பள்ளிச் சிறார்கள் மத்தியில் கல்வி சார் போட்டிகளாகப் பாஓதுதல், நடனம், கதைசொல்லல் ஆகியவை நடத்தப்படும்.
* உப அலுவலக பகுதிகளில் -மரங்கள் நாட்டுதல்
* நூல் நிலையங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துதல்.
* உப அலுவலக பிரதேசத்தில் உள்ள மயானங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல்.
* கொடிகாமம் நகரில் உள்ள உணவு நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு போட்டிகள் நடத்துதல்.
* சாவகச்சேரிப் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மத்தியில் பொது அறிவுப் போட் டிகள் நடத்துதல்.

### நல்லூர் பிரதேச சபையில்...

'நல்லூர் பிரதேச சபை மக்களை நோக்கி...' என்னும் தொனியிலான தொடர் நடமாடும் சேவையை நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாரதியார் சனசமூக நிலையத்தில் 8 ஆம், 16 ஆம் வட்டாரங்களைச் (ஜே/99, ஜே/127) சேர்ந்த மக்களுக்கு நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

மருத்துவ சேவை, சுகாதாரசேவை, ஆதனவரி, பெயர்மாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், கட்டட விண்ணப்பம் தொடர்பான ஆலோசனை, சைக்கிள்களுக்கும் வளர்ப்பு நாய்களுக்கும் உரிமம் வழங்கல், சுற்றுச்சூழல், வியாபார உரிமம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் ஆகிய சேவைகள் வழங்கப்படவுள்ளன. (202)

# கொடிகாமத்தில் மக்கள் வங்கியின் கருமபீடம் இயங்காததால் பிரதேச மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொடிகாமம் நகரில் இயங்கிவந்த மக்கள் வங்கியின் கருமபீடம் நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி வாழ்மக்களும் வர்த்தகர்களும் வங்கி நடவடிக்கைகளுக்குப் பெரும் சிரமப்படுகின்றனர்.

கொடிகாமம் நகரில் சாவகச்சேரி மக்கள் வங்கியின் ஓர் அலகு இயங்கி வந்தது. தென்மராட்சி கிழக்கில் 2006 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி இந்த அலகு மூடப்பட்டது.

கொடிகாம மக்கள் வங்கியின் தற்போதைய நிலைமை தொடர்பாக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கத்திடம் வினவியபொழுது, தமது வங்கியில் உத்தியோதர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் இந்த உத்தியோகத்தர் பற்றாக்குறை நீக்கப்படும் பொழுது கொடிகாமம் மக்கள் வங்கி அலகினை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (202-131)

# நயினாதீவுப் பிரதேசத்தில் இலையான் பெருக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நயினாதீவு ஆலய பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்திலும் இலையான்கள் பெருகியுள்ளன.

இதனால் சுகாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாக ஆலயபகுதியினர் பொதுச் சுகாதார பரிசோதகரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து வேலணை பிரதேச சபைச் செயலாளர் 'எல்சான்-50' மருந்து தெளித்து இலையானை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (202-95)

# ஏனைய பிள்ளைகளின் வாழ்க்கை போல் வலுவிழந்தவரையும் வாழச் செய்வதே நோக்கம்

## வாழ்வகத் தலைவர் ரவீந்திரன் தெரிவிப்பு

சுன்னாகம், ஜூலை 10

ஏனைய பிள்ளைகள் எவ்வாறு வாழ்கிறார்களோ, என்னென்ன செயல்களைச் செய்கிறார்களோ அவ்வாறெல்லாம் வாழவும் செயற்படவும் கூடி ய வகையிலும் விழிப்புல வலுவிழந்தவர்களை ஆக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். இந்த ஆண்டை வாழ்வகத்தின் கல்விக்குரிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாழ்வகத்தின் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கணனியும் ஆங்கிலமும் இல்லாமல் இன்றைய உலகில் வாழ முடியாது. கணனிக் கல்வி என்பது விழிப்புல வலுவற்றவர்களுக்குச் சவாலானதாக ஒரு காலத்தில் கருதப்பட்டது. கணனிக்கல்வி எமது நீண்டநாள் கனவாக இருந்தது. இன்று பேசும் மென்பொருள்களின் துணையுடன் கணனி வேலைகளைச் செய்யுமளவுக்கு விழிப்புல வலுவிழந் தோர் முன்னேறி விட்டனர். வாழ்வகத்தில் கணனி அலகு உரு வாக்கப்பட்டு கணனிக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாழ்வகம் பற்றிய செய்திகளை உலகெங்கும் எடுத் துச் செல்ல முடியும் - என்றார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணனி அலகுத் தலைவர் கலாநிதி எஸ்.மகேசன் கலந்து கொண்டு வைபவரீதியாக இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:-

எந்தவொரு குடிமகனும் கணனியறிவு பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாத தேவையாகும். எல்லோருக்கும் கணனியறிவு என்பது இன்றைய பிரதான நோக்கமாகும்.

அதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தில் பல்வேறு கணனிக் கற்கைகள் இடம் பெறுகின்றன. விழிப்புல வலுவிழந்தவர்களும் பல்கலைக்கழகத்தில் கணனிக் கற்கையை மேற்கொள்ள வழி செய்யப்படும்

இணையத்தளம் என்பது உலகின் ஒரு மூலையில் இருக்கும் கணனியிலுள்ள தகவல்களை பரந்த உலகச் சூழலின் மூலை முடுக்கெங்கும் எடுத்துச் செல்வதாகும்.

அந்த வகையில் வாழ்வகம் உலக வலைப்பின்னலுள் நுழைந்துள்ளது. விழிப்புலனற்றவர்கள் மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதை வாழ்வகத்தின் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

இணையத்தளத்தை அமைத்தமை வாழ்வகத்தின் புதிய பரிமாணத்தை எடுத்துக் காட்டுகின்றது - என்றார். (203-38)

# காரைநகரில் கடற்றொழிலாளருக்கு சுகவாழ்வு மண்டபம் கிறிஸ்தவ ஒன்றியம் அமைத்து வழங்கியுள்ளது

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் சுமார் 23 லட்சம் ரூபா செலவில் காரைநகர் சுக வாழ்வு மண்டபம் ஒன்றை அமைத்து காரைநகர் கடற்றொழில் சமாசத்திட்டம் கையளித்துள்ளது.

இம்மண்டபத்தை சம்பிரதாய பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை தென்னிந்தியத் திருச்சபையின் செயலாளரும் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் பிராந்திய குருவுமான அருட்திரு ஐ. ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன், யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் செயலாளர் அருட்திரு வி.பத்மதயாளன் ஆகியோர் பங்கு பற்றினர். கடற்றொழில் பரிசோதகர், கிராம சேவையாளர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



கட்டடத்தை காரைநகர் உதவி அரச அதிபரும் கிறிஸ்தவ ஒன்றியக் குழுக்களும் இணைந்து காரைநகர் கடற்றொழில் சமாசத் தலைவரிடம் கையளிக்கும் போது.

# இறகுவலை, களங்கட்டிவலை தொழிலாளர்கள் பட்டினி நிலையையே எதிர்கொள்கின்றனர்

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை10

குடாக்கடலில் இறகுவலை, களங்கட்டி வலை தொழில்தடைசெய்யப்படுள்ளதால் கடற்றொழிலாளர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். இதனால் அவர்கள் பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர். யாழ் மாவட்ட சமாசத் தலைவர் சி.தவரட்ணம் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாக் கடலில் பண்ணைப்பாலத்திற்கு கிழக்காக உள்ள பகுதியில் இறகு வலை மற்றும் களங்கட்டி வலைத் தொழில் செய்வதற்கு இதுவரை அனுமதி வழங்கப் படவில்லை.

இதனால் பாசையூர், குருநகர், கொழும்புத்துறை பிரதேசங்களின் தொழிலாளர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

கடந்த மாதம் இந்தக் கடல் பிரதேசத்தில் தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் கடலில் இருந்த வலைகள் தொழிலாளரால் முழுமையாக அகற்றப்பட்டன.

எனினும் இந்தத் தடை கடந்த மாதம் 21 ஆம் திகதி அகற்றப்பட்டுள்ளதாக பத்திரிகைத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் கரையோரத்தில் மீன்பிடிக்க மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

இறகுவலை களங்கட்டி வலைத்தொழில் செய்வதற்கு இதுவரை அனுமதிக்கப் படவில்லை.

கம்புகள், வலைகள் எடுத்துச் செல்ல முடியவில்லை. இதனால் பாசையூரைச் சேர்ந்த 95 வீதமான கடற்தொழிலாளர்களும் குருநகரைச் சேர்ந்த 60 வீதத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

தடை அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட பொழுதும் உண்மையில் அதனால் கடல் தொழிலாளர் குடும்பங்களுக்கு பலன் ஏதும் ஏற்படவில்லை. இவர்கள் இறகு வலை, பாய்ச்சுவலை தொழிலை நம்பி இருக்கின்றனர். தொழில் வாய்ப்பை இழந்துள்ள இந்த தொழிலாளர் பட்டினி நிலையை எதிர் கொண்டுள்ளனர் - என்றார். (203-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டகலாத
# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி
## இராசேந்திரம் பாக்கியம்

மலர்வு: 29.07.1939

உதிர்வு: 14.07.2005

அன்பின் பிறப்பிடமே! பண்பின்
பொக்கிஷமே!
அன்னையே எங்களை ஆளாக்கிய
தாயே!
உங்கள் அன்பு முகம் என்றும் எம்
நெஞ்சங்களில்
நிழலாக நின்று நினைவூட்டுகிறதே
அம்மா!
நன்னெறியில் நாம் வாழ வழிகாட்டிய
தாயே!
வணங்கியே துதிக்கின்றோம்
வணக்கம் அம்மா!

**குடும்பத்தினர்.**

830, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(78145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்.....



கோண்டாவில் மேற்கு உப்புமடம்சந்தி பிள்ளையார் கோயில் வருடாந்தத் தேர்த்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படம்.

அடியார்கள் தேங்காய் உடைத்து நேர்த்தியை நிறைவேற்றுவதையும் வடம் இழுத்துவரப்படும் தேரையும் படத்தில் காணலாம். (86)





யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் பார்வைக் குறைபாடுள்ள 50 மாணவர்களுக்கு அண்மையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மனித நேய கூட்டமைப்பினின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களைப் படத்தில் காணலாம். (302)





சோனகதெரு வடக்கு (யாழ்ப்பாணம்) கிராம சேவையாளர் பிரிவிலுள்ள "இக்ரஃ" முன்பள்ளிப் பிள்ளைகளின் ஆக்கத்திறன் கண்காட்சி "மக்கள் பணிமனை"யின் அனுசரணையுடன் இந்த அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. கண்காட்சியில் எடுக்கப்பட்ட படம் இது.

*(படம்: இ.ஸ்ரீறாஜினி)*



யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய பிரதேச கலாசார விழாவில் சிறப்புச் சேவையாற்றிய கலைஞர்களுக்கு யாழ்.ரத்னா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

புலவர் பிரான்சிஸ் ஆனந்தராஜருக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் விருது வழங்குவதைப் படத்தில் காணலாம்.



யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கல்லூரியில் இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டது.

மாணவர்களும் ஆசிரியர்களும் இரத்ததானம் செய்வதைப் படத்தில் காணலாம்.




மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அண்மையில் கைதடி முதியோர் இல்லத்தில் இடம்பெற்றன. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலைநிகழ்வுகளை முதியோர்கள் ரசிப்பதைப் படங்களில் காணலாம்.

*(படம்:தென்னவன்)*



வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்திய காலை உடற் பயிற்சியில் முன்பள்ளி ஆசிரியர்கள் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (218)



பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் குடும்பநல சேவைத்தியோகத்தராகக் கடமையாற்றிய அமரர் அலற்றா சவரிமுத்துவின் ஞாபகார்த்தமாக இளவாலையில் நிறுவப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இளவாலை மறைக்கோட்ட முதல்வரும் பங்குத்தந்தையுமான அருட்திரு. எம்.தேவசகாயம் அடிகளார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பஸ்தரிப்பு நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதை இங்கு காணலாம்.

*(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையாளர்களுக்கான பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கிராம அலுவலர் சேவையின் தரம் II கிராம அலுவலர்களை தரம் I இற்கும் பதவி உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் சேவையின் தரம் II இல் 10 வருடசேவைக்காலத்தை 31.07.2008 ஆம் திகதி பூர்த்தி செய்தவர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலரின் சிபாரிசுடன் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 04.07.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 10

கிராம அலுவலர் சேவையின் தரம் II கிராம அலுவலர்களைத் திறமை அடிப்படையில் தரம்I இற்குப் பதவி உயர்த்துவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்டிருந்த காலப்பகுதி அடங்கலாக 31.07.2008 ஆம் திகதி கிராம அலுவலர் சேவையில் தரம்II இல் 15 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களின் இரு பிரதிகளை பிரதேச செயலரின் சிபாரிசுடன் மாவட்ட செயலருக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 04.07.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 10

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 14 நகரங்களில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவர் ஊடாக 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப்பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 04.07.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 10

இலங்கை நூலகர் சேவையின் தரம் II, தரம் III அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத்திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 27.06.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சின் தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தித் செயல்திட்டத்தின் செயற்றிட்ட முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2006 ஆம் ஆண்டு முதல் 5 வருட காலங்களுக்கு அமுல்படுத்தப்படுகின்ற இச் செயற்றிட்டத்தின் கொழும்பில் அமைந்துள்ள பிரிவிற்கே இப் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சு, 'நிபுனுதா பியச', 354/2, அல்விற்திகல மாவத்தை, கொழும்பு-5' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 27.06.2008 ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம்.

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 10

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு வெற்றிடமாகவுள்ள வீடியோ படப்பிடிப்பாளர், படப்பிடிப்புக் கருவி இயக்குநர் (உதவியாளர்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வீடியோ படப்பிடிப்பாளர் பதவிக்கு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் பல்கலைக்கழகத்தில் அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தில் நிழற்படப்பிடிப்பு மற்றும் வீடியோப் படப்பிடிப்பு தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும். அத்துடன் அரசாங்கத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 5 வருடங்கள் பணியாற்றியிருத்தல் வேண்டும்.

படப்பிடிப்புக் கருவி இயக்குநர் பதவிக்கு ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நிழற்படக் கருவியை இயக்குவதில் அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், காணி, காணி அபிவிருத்தி அமைச்சு, இல 80/5, "கொவிஜன மந்திரய", இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 27.06.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

# செயல்கள் அனைத்தும் இறைவனுக்கு அர்ப்பணமாகட்டும்

தெய்வீக அன்பு எல்லோரிடமும் உள்ளது. அது மாறாதது. குறையாதது. பலவந்தத்தினால் அடையப்படுவதல்ல. இதயத்தின் மூல ஊற்றிலிருந்து வெளிவருகிறது. தெய்வத்துவம் எல்லோரிடமும் உள்ளது. இவ்வாறிருத்தல் அநேகத்வம் அல்ல, ஏகத்வம் ஆகும்.

இத்தகைய ஒருமையுணர்வை இதயத்தில் கொண்டு, பவித்ரமான செயல்களை முடிந்தபோது செய்து கொண்டு வருவது மிகவும் உயர்ந்தது. கடமையை விடுதல் வேண்டாம். எந்த வேலையையும் விலக்கவேண்டாம். அனைத்து வேலைகளையும் அனைத்து காம்யங்களையும் புரிந்துகொண்டு வா. செயல்கள் அனைத்தும் இறைவனுக்கு அர்ப்பணமாகட்டும். அப்போது அனைத்தும் தெய்வீகமாக மாறிவிடும்.

கடவுளில்லாத இடமேயில்லை. அனைத்தும் கடவுளாகும். கடவுள் உன்னுடன், உனக்கு மேலே, உனக்குக் கீழே, உன்னைச்சுற்றிலும், உனக்குள்ளே இருக்கிறார். இருப்பது ஒன்றே. உன்னால் காண இயலாது. அது கையிலும் சிக்காது. சுவாமி முன்பு கூறியதுபோல சுற்றிலும் காற்று இருக்கின்றது. காற்றில்லாமல் உயிர் வாழ இயலாது. அதைக் காண இயலாது. கையால் பற்றவும் இயலாது. ஆகையால் அது இல்லை என்று கூற இயலுமா? அது இல்லாமல் நாம் வாழ இயலுமா? பஞ்ச பூதங்களும் தெய்வ வடிவமே. இவற்றில் எதையும் வீணாக்கலாகாது.

பற்றுதலால் உலகத்துடன் தளைப்பட்டிருத்தலால், முக்தி பெற இயலவில்லை. இத்தகைய பற்றுதல், தவறான எதிர்மறை நிலை (NEGATIVE). முக்தி நிலையே நேரான, சரியான நிலை (POSITIVE). நாம் நேரான மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். தெய்வத்துவத்தை நாடவேண்டும்.



சாயி சிந்தனை

# உள்ளூராட்சி மறுசீரமைப்பு திட்டங்கள் வடக்கிலும்

மானிப்பாய், ஜூலை 10

உள்ளூராட்சி மறு சீரமைப்பு திட்டங்களை வடக்கு மாகாணத்திலும் அமுல்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். முதற் கட்டமாக மன்னார், வவுனியா, பிரதேச உள்ளூராட்சி சபைகளின் உள்ளூராட்சி மறுசீரமைப்புத்திட்டங்கள் நடைமுறைகளை நேரில் ஆராய்வதற்கு உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள் குழு விரைவில் வவுனியா செல்லவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மேற்படி திட்டங்களை ஆராய அடுத்த மாதம் யாழ்.உள்ளூராட்சி சபைகளுக்கும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் குழு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202–95)

# வாசகர் திருமுகம்

## யாழ் மாவட்ட மக்களும் சி.டி.எம்.ஏ தொலைபேசி சேவையும்

யாழ். மாவட்டத்திலுள்ள சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் பாதுகாப்பு அனுமதி பெற்று வழங்கிய சி.டி.எம்.ஏ தொலைபேசிகள் இயங்காமல் இருப்பதற்கான காரணத்தை சிறிலங்கா ரெலிகொம் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தரவில்லை. இந்த சி.டி.எம்.ஏ தொலைபேசிகள் இயங்காது உள்ளதனால் பல்வேறு வருமான இழப்புக்களை நாம் எதிர்கொண்டுள்ளதுடன் உறவினர் தொடர்புகளையும் பெறமுடியாமல் உள்ளது.

இந்த தொலைபேசி சேவை கடந்த பல நாள்களுக்கு மேலாக இடைநிறுத் தப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கோளாறு காரணமாக செயற்படவில்லை என்றால் எவ்வாறு அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களில் வேலை செய்கின்றது என்பது புரியாது உள்ளது. தொழில்நுட்பக் கோளாறு ஆயின் இதனை திருத்த அவர்கள் இவ்வளவு நாள்களாக நடவடிக்கை எடுக்காததை இட்டு பாவனையாளர்களான நாங்கள் விசனம் அடைந்துள்ளோம்.

தற்போது வழங்கப்படும் சி.டி.எம்.ஏ தொலைபேசியை இணைய வசதி உடைய தொலைபேசியாக மாற்றுவதற்கோ அல்லது P-card மாற்றி பெறுவதற்கு பாதுகாப்பு அனுமதி தேவைப்படுகின்றது என்றும் இதற்கு எங்களை புதிதாக பாதுகாப்பு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. இவ்வாறான நடைமுறை தேவையற்ற ஒன்றாகும் ஏன் என்றால் நாங்கள் முன்னர் பெற்ற தொலைபேசிக்கு பாதுகாப்பு அனுமதி பெற்று இவர்கள் மறந்து விட்டார்கள் போல் உள்ளது.

சி.டி.எம்.ஏ தொலைபேசியில் பலவகை தெரிவுகள் உள்ளன. இவ்வாறான பல வகையான சி.டி.எம்.ஏ தொலைபேசி தெரிவுகள் இருக்கின்ற போதிலும் யாழ். மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு ஏன் சாதாரண தொலைபேசி (இணையவசதி அற்ற சி.டி.எம்.ஏ) வழங்கப்படுகின்றன. வேறு தெரிவு இல்லாதபடியால் மக்கள் இதனை பெற்றுக் கொள்கின்றனர்.

இன்றைய நவீன உலகில் இணையம் என்பது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. யாழ். மாவட்ட மக்களிற்கு இணைய வசதி உடைய தொலைபேசிகளை வழங்குவதற்கு யாழ் சிறிலங்கா ரெலிகொம் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட சி:டி:எம்.ஏ பாவனையாளர்.

## சுகாதார அதிகாரி கவனம் எடுப்பாரா?

சரசாலை வடக்கு, கொம்பிபுள காட்டுப் பகுதியிலும் சதுப்பு நிலப் பகுதியிலும் சாவகச்சேரிப் பகுதி மற்றும் வேறு இடங்களில் இருந்தும் மலசலகூடக் கழிவுகளை தாங்கிகளில் அடைத்த வாகனங்களில் சாவகச்சேரி பருத்தித்துறை வீதிவழியாகக் கொண்டு சென்றுகொட்டிவிட்டுச் சென்று விடுகின்றார்கள்.

இதனால் சரசாலை வடக்கில் வாழும் மக்கள் நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களுக்குள்ளாகிறார்கள். துர்நாற்றத்தினாலும் அவதியுறுகின்றனர். அத்துடன் அப்பகுதியில் பிரயாணம் செய்யும் மக்களும் துர்நாற்றத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். இச் செயலை நாம் தடுக்க முயற்சி செய்யும் அது கைகூடவில்லை. ஆகவே இச் செயற்பாட்டை யாழ். சுகாதார வைத்திய அதிகாரி தமது அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்து மக்களின் சுகவாழ்வைப் பாதுகாத்துத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,சரசாலை வடக்குக் கிராம அபிவிருத்திச்சங்கம்.

## யாழ்.குடாநாடும் வரட்சியும்

வடமராட்சியில் கிணறுகளிலும், குழாய்க் கிணறுகளிலும் நீர் வற்றிவிட்டது; பயிர்ச்செய்கை பாதிப்படைகின்றது என்று பத்திரிகையில் காணப்பட்டது.

20 ஆண்டுகளில் பெய்யாத கோடைமழை சென்ற இருமாதங்களில் 300 மி.மீ அளவு பெய்துள்ளது. அப்படி இருந்தும் இந்த ஆனி மாதத்தில் வரட்சி வரக் காரணமில்லை. வழக்கமாக ஆவணி, புரட்டாதி மாதங்களே வரட்சியான மாதங்களாகக் காணப்படும். எனவே இவ்வளவு மழை பெய்தும் இப்பொழுது வரட்சியாக இருக்கக் காரணமில்லை.

சுண்ணக்கற்களில் ஒரு கியூப்பில் 10 கனஅடி அதாவது 62.4 கலன் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டுள்ளது. அதை அகற்றினால் - அதாவது 100 கன அடி = 1 கியூப் இதை அகற்றினால் நிரந்தரமாக 62.4 கலன் நிலத்தடி நீர் இல்லாது போய்விடும். இதை ஒருவரும் கவனிக்கின்றனர் இல்லை. மணல், மண்ணில் மழை பெய்தால் அது உடனடியாக பாறையில் போய்த்தான் சேரும். இப்படிப் பாறைகளை அகழ்ந்தால் மழை நீர் அதிக ஆழத்துக்குப் போய்விடும். கிணறுகளில் நீர் ஊறமாட்டாது.

எந்திரி க.யோகராசா, அரியாலை.

## நலிவுற்றோர் நிவாரணத்தை மீள வழங்குங்கள்

A-9 பாதை தடைப்பட்டதால், தொழில் முயற்சிகள் முடக்கப்பட்டு தொழில் இழந்து வருமானம் இன்றி பலதரப்பட்ட மக்கள் வறுமையுடன் வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வாழ்வா சாவா? என்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன், அத்தியாவசியப் பொருள்களின் 'விசம்' போன்ற விலையேற்றத்தில் நிவாரணத்தையே நம்பி வாழும் துயரமான இக்கட்டான நிலையில் யாழ். மவட்ட ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் அல்லற்பட்டு தவிக்கின்ற குடும்பங்களின் கண்ணீர்க் கதைகள் மனதை உருக்கும் நிலையில் உள்ளன.

இந்நிலையில் பல்வேறு காரணிகளால் நாட்டு சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு நலிவுற்று வாடும் மக்களுக்கு உலக உணவுத்திட்ட நலிவுற்றோர் உணவூட்டல் திட்ட நிவாரணம் வரப்பிரசாதமாக அமைந்து அரைவயிறுக் கஞ்சியாவது குடிக்கும் நிலை காணப்பட்டது.

ஆனால், பல்வேறு காரணங்களை வெளித்தோற்ற பார்வையை மட்டும் கணக்கில் எடுத்து நாட்டின் பயங்கர சூழ்நிலை உணராது திடீரென வழங்கப்பட்ட நலிவுற்றோர் நிவாரணம் 2008 ஆனி மாதத்துடன் நிறுத்தப்பட்டு பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினிப் போராட்டம் நடத்தி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் நல்ல கனவான்கள் தன்மை உள்ள கிராம அலுவலர் மத்தியில் சில புல்லுருவிகள் சுயநலப்போக்கு அதிகாரமதை கொண்ட கிராம அலுவலர்களால் போலியான காரணங்களைக் காட்டி முகம் பார்த்து பல ஏழைகுடும்பங்கள் நலிவுற்றோர் நிவாரணம் மறுக்கப்பட்டு துயரநிலைச் சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் துயரம் போக்க நிறுத்தப்பட்ட நலிவுற்றோர் நிவாரணங்களை அனுதாபத்துடன் பரிசீலித்து வழங்க மாவட்டச் செயலரும் பிரதேசச் செயலர்களும் முன்வர வேண்டும் என விநயமாகக் கேட்கின்றேன்.

சமூக ஆர்வலர். வ.க.ஜெயபாலன்,ஜே.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை

யாழ். மாவட்டப்பாடசாலைகள்பலஇன்று ஆங்கில ஆசிரியர்கள் இன்றி செயற்படுகின்றன. ஆனால் இது பற்றி வடமாகாண கல்வித் திணைக்களம் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

யாழ் மாவட்டத்தில் தற்போது சுமார் 325 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. 70இற்கு மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டும், வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டும் காணப்படுகின்றன.

இதன் மூலம் குறிப்பாக வடமாகாண ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன. தற்போது தற்காலிக இணைப்புகள் வழங்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளாங்கள்.

இவர்களும் தமது வீடுகளுக்கு அருகில் அல்லது வசதி படைத்த பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளார்களே தவிர பாடசாலைகளின்தேவைகள் மற்றும் பாடரீதியான தேவைகளைக் கருத்தில் கொண்டு இணைக்கப்பட்டது பெரும்பாலும் குறைவு எனலாம்.

பாடசாலைகளில் இன்று ஆங்கில ஆசிரியர்கள் இல்லையென்ற நிலைமையும் இந்த வகையில்தான் உருவாகியுள்ளது எனலாம்.

பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமனம் என்று கூறப்பட்ட போதிலும் மாணவர்களின் கல்வித் தேவைக்கு ஏற்ப பாடரீதியான ஆசிரியர்கள் இல்லையென்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

**வெறும் ஆலோசனைகளால் பயன் ஏதும் இல்லை**

பாடசாலைகளுக்கு நிகழ்வுகளில் கலந்து கொள்ளச் செல்லும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் முதற்கொண்டு கல்வியாளர்கள் மற்றும் துறைசார்ந்தவர்களும் ஆங்கிலக் கல்வி, அதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் ஆங்கிலத்தின் சர்வதேச முக்கியத்துவம் என்றெல்லாம் ஆலாபரணத்துடனும், உதாரணங்களுடனும் முழக்கி விட்டுத் திரும்பி விடுகிறார்கள்.

இலவச ஆலோசனைகள் வழங்கினால் மட்டும் மாணவர்களுக்கு ஆங்கிலக்கல்வி கிடைத்து விடமாட்டாது. பெற்றோர்கள் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கி தமது பிள்ளைகளைக் கொண்டுசெல்வதும், அதே போன்று தனியார் பாடசாலைகளை நாடிச் செல்வதும் பெரும்பாலும் இந்த ஆங்கில மொழி அறிவைப் பிள்ளைகள் பெற்றுவிட வேண்டும் என்ற ஆசையில்தான்.

கிராமப்புறங்களிலும் செல்வாக்கு குறைந்த பிரபல்யம் அற்ற பாடசாலைகளிலும் கல்வி கற்கும் பிள்ளைகள் ஆங்கிலம் கற்க முடியாத நிலைமையே இன்று நிலவுகின்றது.

இளமையிற்கல்வி சிலைமேல் எழுத்தென்பார்கள். இந்த வகையில் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனுக்கு அடிப்படை ஆங்கிலக் கல்வியை புகட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் கல்வித் திணைக்களத்திற்கு உண்டு.

## ஆரம்ப நிலையில் ஊட்டப்படும் ஆங்கில அறிவே உயர் வகுப்புக் கற்றலுக்கு அடித்தளமாக அமையும்

அந்த வகையில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு ஆங்கில ஆசிரியர்களை உரிய முறையில் நியமிக்க வேண்டும். இதேபோன்றே இடைநிலைக் கல்வி வரையான பாடசாலைகளின் நிலைமையும் ஆகும்.

ஒரு சில பாடசாலைகளில் அதிபர்களின் முயற்சியும் ஊக்கமும் வரவேற்கத் தக்கதாக உள்ளது. தங்கள் பாடசாலையில் உள்ள ஆங்கில அறிவு பெற்ற ஆசிரியர்களை ஆங்கிலம் கற்பிக்க இவர்கள் பயன் படுத்திக் கொள்வதைக் குறிப்பிடலாம்.

இதுவும் கூட ஆரம்பப்பிரிவு இடைநிலைக்கல்வி மாணவர்களுக்கு ஏற்புடையதாக அமைய முடியுமா என்பதும் கேள்விக்குரியதே. இதனை வைத்துக் கொண்டு அந்தப் பாடசாலைக்கான ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்கப்படாமல் விடுவது நகைப்புக்குரியது.

**பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நிலைமை**

யாழ்.குடாநாட்டில் இன்று ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையென்பது மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளது. இதனை நிவர்த்திக்கும் முகமாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்வதாகும். கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டு ஒரு சிலர் கடமையாற்றி வந்தார்கள்.

அவர்களும் இன்று பாடசாலைகளுக்கு பகுதிநேர ஆசிரியர்களாக செல்வதற்கு மறுத்து நிற்கின்றார்கள். அவர்களுக்கு மணித்தியாலத்திற்கு வழங்கப்படுவது வெறும் 80 ரூபா மட்டுமே. இதற்காக அவர்கள் பாடசாலை தொடங்கி முடிவடையும் வரை பாடசாலையில் கடமையாற்ற வேண்டும் என்பது கல்வித்திணைக்களத்தின் அறிவுறுத்தல். 23 நாள்கள் தான் பாடசாலைகள் நடைபெறும். கிடைக்கும் சம்பளமோ 2ஆயிரம் கூட இல்லை. ஒரு காலத்தில் ஆங்கில ஆசிரியர்கள் பெற்ற சம்பளம் ஏனையவர்களைவிட அதி கம் என்று போராட்டம் கூட நடைபெற்றதுண்டு. இப்பொழுது முழு நாளும் வேலை செய்து மாதம் 2 ஆயிரம் கூட சம்பளம் இல்லை என்றால் அதற்காக மாரடிக்க எவர் முன்வருவார்- எனவேதான் பகுதிநேர ஆசிரியர்கள் போகாமல் நின்று விடுகிறார்கள்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து ஆங்கிலப் பயிற்சி நெறியை பூர்த்திசெய்து வெளியேறுபவர்களும் வடக்கு, கிழக்குக்கு வெளியால் நியமனம் பெற்று செல்கின்றார்கள்.

மறுபுறத்தே தொழில் நுட்பக் கல்லூரியில் ஆங்கில தராதரப் பத்திரப் பயிற்சி நெறியைப் பெற்று வெளியேறுபவர்கள் மற்றும் உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் இருந்து ஆங்கில உயர்தேசிய டிப்ளோமா சான்றிதழை பெற்று வெளியேறுபவர்களுக்கும் ஆங்கில ஆசிரியர் நியமனங்களை வழங்குவதன் மூலம் இந்த ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவுக்கு நிவர்த்திக்க முடியும்.

இதேபோன்று தொழில் நுட்ப நிறுவனங்களில் ஆங்கிலப் பயிற்சியினை மேற்கொண்டவர்களுக்கு, ஏனைய தொழில் நுட்பக் கல்லூரியில் கற்கும் மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சிகள் வழங்கப்படுவதைப் போன்று இந்த ஆங்கிலப் பயிற்சி நெறிகளை மேற்கொள்பவர்களுக்கும் பாடசாலைகளில் குறிப்பிட்ட காலத்திற்கேனும் பயிற்சிக்கு அனுப்புவதன் மூலம் ஓரளவு பின் தங்கிய மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பெருந்திறமை பெறாவிட்டாலும் அடிப்படை அறிவைப்

**விண்ணன்**

பெறவேனும் வாய்ப்பு உண்டாகும்.

இவைகள் எதனையும் கருத்தில் கொள்ளாது வெறுமனே ஆங்கிலம் முக்கியம், ஆங்கிலம் எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டும் என்று கூறிக் கொண்டு இருந்தால் மட்டும் ஆங்கிலம் மாணவர்களுக்கு

(08 பக்கம் பார்க்க)




# அனுபவத்தினை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு அதன் உண்மைத் தன்மையை நியாயப்படுத்துகின்றது

**பொ**துவாக அனுபவரீதியான அறிவுடன் பெறப்பட்ட தரவுகள், தகவல்களின் அடிப்படையில் உய்த்துணர்முறை அல்லது தொகுத்தல் முறை போன்ற விளக்கம் கூறும் முறைகள் மூலமாக கேள்வி ஒன்றுக்கு விடையளிக்க முற்படல் அல்லது பிரச்சினையொன்றுக்குத் தீர்வுகாண முயற்சித்தல் ஆய்வின் அடிப்படை அம்சமெனலாம். உய்த்துணர் முறை ஆய்வு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையில் இருந்து வருவிக்கப்படும் செய்திகளைப் பெறுவதே இம்முறையின் செயலாகும். இவ்வகை ஆய்வில் பலதரப்பட்ட தகவல்களில் பொருத்தமற்றவற்றை நீக்கி பொருத்தமான உண்மையைக் கண்டறிய முடியும். இது ஆய்வின் கருதுகோளைக் கண்டறியவும், கிடைத்த தரவுகள் சரியானவையா என்பதை அடையாளம் காணவும் உதவும்.

இந்தமுறை ஆய்வின் மூலம் பெறப்படும் முடிவுகள் "பொது மதிப்பீடுகள்" என்ற அளவில் கணிக்கப்படும். இவ்வகை ஆய்வுக்கு இயல்பான அறிவுக் கூர்மை, கற்பனையாக எண்ணிப்பார்க்கும் இயல்பு, அனுமானங்கள் என்பன போதுமானவை. தொகுத்தல் முறை ஆய்வு என்பது ஏற்கனவே பெறப்பட்ட சில முடிவுகளின் தொகுத்தலில் இருந்து ஆய்வை முன்னெடுத்துச் செல்வதாகும். உதாரணமாக வறிய குடும்பங்களில் தொற்று நோய் அதிகம் என்பது பொதுவாக 'அனுபவரீதியான அறிவில் இருந்து பெறப்பட்ட முடிவு. இதனை அடிப்படையாகக் கொண்டு தொற்றுநோய் பரவுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள், அவை பெருகுவதற்கான சூழ்நிலைகள் என்பன பற்றிய ஆய்வில் தொகுத்தல் முறையைப் பின்பற்றலாம்.

தொகுத்தல் முறையில் முன்னர் பெறப்பட்ட முடிவில் இருந்து ஆய்வு தொடர்வதால் முன்னைய முடிவுகளை ஆய்வாளர் மறுதலிக்கவும் இடமுண்டு. பொதுவாக ஓர் ஆய்வில் உய்த்துணர் முறையையும் , தொகுத்தல் முறையையும் இணைத்தும் செயற்படுத்

**தமிழரின் கல்விப் பாரம்பரியத்தில் ஆய்வும் அதற்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணலும்**

**பாகம் 2**

தலாம். ஆனால், இம்முறையில் உய்த்துணர் முறை ஆய்வில் பெறப்பட்ட முடிவில் அல்லது உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டதில் பிழையிருக்குமாயின் தொகுத்தல் முறை ஆய்வும் பயனற்றதாகப் போய்விடும்.

இம்மூன்று விளக்கம் கூறும் முறைகளையும் ஒழுங்குபடுத்திப் தர்க்கரீதியாக அவற்றை முன்னெடுத்தல் நல்லதோர் ஆய்வு அணுகுமுறைக்கு அடித்தளமாக அமையுமெனலாம். இவ்வாறான ஆய்வு முறையைப் பின்பற்றியே 19ஆம் நூற்றாண்டில் டார்வின், தாமஸ் மல்லடத்தூஸ் போன்ற அறிஞர்கள் மிகப் பிரசித்தி பெற்ற ஆய்வுகளை மேற்கொண்டனர். இக்காலத்தில் இவை அறிவுசார் அணுகுமுறையாகக் கொள்ளப்படுகிறது. ஆயினும் இவைகூட பிரச்சினைக்குரிய காரணங்களையும், சூழ்நிலைகளையும் முழுமையாக எடுத்துக் காட்டாது என்ற விவாதமும் உண்டு. ஏனெனில் அனுபவ அறிவு அல்லது அனுமானம் என்பவற்றின் அடிப்படையில் முன்னெடுத்துச்செல்லப்படும் பொதுவான முடிவுகளும், விளக்கங்களும் பெரும்பாலும் மேலோட்டமானவையாகவே இருப்பதுடன் அவை ஆய்வுக்குப் பொருந்தாத பல தகவல்களைத் தரக்கூடியவை. இவற்றைக் கட்டுப்படுத்துவதாகவும், ஒழுங்குமுறைப்படுத்துவதாகவும் திட்டமிட்ட ஆய்வு அமைகிறது. தர்க்கரீதியான ஆய்வு பொதுவாக ஒரு பிரச்சினைக்குரிய உண் மைக் காரணத்தைக் கண்டறிய உதவும்போது, அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு அதன் உண்மைத் தன்மையை நியாயப்படுத்த உதவுகின்றது. ஆய்வு தொடர்பான அணுகுமுறையில் வேறுபட்ட அனுபவத்தையும், தர்க்கரீதியான விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஆய்வின் நோக்கம் பெரும்பாலும் சுயமான முடிவை அடிப்

## தனது நோக்கம் குறித்த தெளிவான அறிவு ஆய்வாளனுக்கு மிகவும் அவசியமானது

படையாகக் கொண்டவையாக இருக்கும். ஆனால், திட்டமிட்ட முறையில் முன்னெடுத்துச் செல்லும் ஆய்வு பரிசோதனை அடிப்படையில் கண்டறியப்படுகிறது.

இன்றைய நவீன ஆராய்ச்சியில் இரசாயனவியல், பௌதிகவியல் , உயிரியல், உளவியல், சமூகவியல் போன்ற கற்கைகள் சார்ந்த ஆய்வுகள் ஆய்வுகூடங்களில் நிகழ்த்தப்படுகின்றன. ஆய்வுகூடப் பரிசோதனைகளின் நோக்கம் ஆய்வுக்கு உரிய தரவுகளைத் தகவல்களை ஆய்வு வரையறைகளுக்கு உட்பட்டு ஓர் ஒழுங்கமைவுக்குள் பெற்றுக்கொள்வதே ஆகும். மேலும் ஆய்வொன்றில் எடுத்துக் கொள்ளப்படும் கருதுகோள்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தவும் உதவும். எனவே, ஆய்வின்

பது வரையறுக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றினுள் பெறப்படும் தரவுகளின் துணையுடன் கேள்விக்கான ஒரு விடையை , பிரச்சினைக்கானவோர் தீர்வை அல்லது கோட்பாடொன்றின் சிறப்பான விளக்கத்தைப் பெறுவதே என்று கூறலாம்.

***ஆய்வாளனுக்கு வேண்டிய முக்கியஅம்சங்கள்***

கற்கைநெறியொன்றுடன் சம்பந்தப்படும் முன் னைய ஆய்வுகள் அவற்றுடனான தரவுகள், தகவல்கள் என்பவற்றை ஒழுங்கு படுத்தி கூர்ந்து கவ னிப்போமாகில் எம் மால் பல விடை தெரியாத வினாக்க ளையும் தீர்க்கப் படாதிருக்கும் பிரச்சினைகளையும் இனங் காணமுடியும். இந் நிலையே ஆய்வின் தொடக்கப்புள்ளியெனலாம். அதாவது நாம் விரும்பும் பாடப் பரப் பில் அதில் உள்ள எமது அறிவுக்கும் எம்மிடம் உள்ள திறனுக்கும் ஏற்ற வகையிலும் ஆய் வுக்கான கருப்



***பேராசிரியர் க. கந்தசாமி***
*பேராசிரியர் பௌதீகத் துறை மற்றும் பீடாதிபதி உயர் பட்டப் பின்படிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

பொருளொன்றை இனங்காணலே ஆய்வின் முதற்படியாகும். கருப்பொருளொன்றை இனங் காண்பதற்கான தேடலை முன்னெடுததுச் செல்லும்போது ஆய்வாளன் சுயமாகவும் செயற்படலாம் அல்லது அனுபவமுள்ள ஆய்வாளர்க ளின் உதவியையும் பெறலாம். ஆனால், தேடலில் எழும் வினாக்களுக்கு விடை காண் பதற்கு, பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை முன்மொழிவதற்கு போதிய அறிவு, திறன் எம்மிடம் உண்டா என்பதை சுய மதிப்பீடு செய்வது மிகவும் அவசியமாகும். மேலும் ஆய்வாளனுக்கு சரியான வினா எழுப்பும் திறன் மிகவும் இன்றியமையாத அம்சமாகும்.

ஆய்வுக்கு தெளிவான நோக்கமும் அதை முன்னெடுத்துச் செல்வதில் வரையறுக்கப்பட்ட ஒழுங்கு முறையும் இருக்கவேண்டும். ஆய்வாளனொருவன் தனது ஆய்வின் நோக்கத்தைத் திருத்தமாக வரையறுப்பதும் ஆய்வை எந்த முறையில் முன்னெடுக்க உள்ளான் என்பதில் தெளிவும் ஆய்வின் வெற்றிக்கு இன்றியமையாதது.

நாம் ஆய்வைச்செய்யும்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆய்வு முறைகள், கருவிகள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அவை சரியென உறுதிப்படுத்திக்கொள்ளும்நிலையில்தான் முன்னெடுக்கப்படும் ஆய்வும் அதன் இலக்கை எதிர்பார்க்கும் முறையில் அடையும். ஊதாரணமாக சில ஆய்வுகளில் தரவுகள் திரட்டுவதற்கு ஆய்வுடன் சம்பந்தமான வினாகொத்து தயாரித்து பொருத்தமான பங்காளிகளுக்கு விநியோகித்துத் தேவையான தரவுகள், தகவல்கள் திரட்டுவது வழமை. இதற்கு ஆய்வாளனுக்கு தனது ஆய்வின் நோக்கம் பற்றிய தெளிவான அறிவும் தனது ஆய்வு முறை பற்றிய திருத்தமான அறிவும் இன்றியமையாததாகும். ஏனெனில், ஆய்வுக்குரிய வினாக்கொத்து தயாரிக்கும் போது ஆய்வுப் பிரச்சனை தொடர்பாக என்ன கேள்விகள் இடம்பெறவேண்டும், அவை என்ன வகையில் கேட்கப்படவேண்டும். அவை யாரிடம் கேட்கப்படவேண்டும் என்பதில் ஒரு தெளிவிருக்க வேண்டும்.

ஆய்வின் நோக்கம் பற்றிய தெளிவான அறிவும் ஆய்வுமுறை பற்றிய தெளிவும் ஆய்வுக்கு முன்னைய ஆய்வு முடிவுகளை உபயோகிப்பதற்கும் ஆய்வுக்கான கருவிகளை தெரிவதற்கும் இன்றியமையாததாகும். உதாரணமாக பொருளொன்றின் வெப்பவியல்பு பற்றிய ஆய்வில் அப்பொருளின் வெபபத்தை அளப்பதற்கு வெப்பமானியைப் பயன்படுத்தலாம். பலவிதமான வெப்பமானிகள் பலவிதமான அதன் அளவுச் சட்டங்களுடன் உள்ளன. அவற்றுள் ஆய்வுக்கு எந்த வெப்பமானியைத் தெரிவு செய்யவேண்டுமென்பதற்கு ஆய்வின் நோக்கம் பற்றிய தெளிவான அறிவு இல்லாவிடத்து ஆய்வுக்குப் பொருத்தமான வெப்பமானியைச் சரியான அளவுச் சட்டத்துடன் தெரிவு செய்யமுடியாதிருக்கும். சரியான தெரிவில்லையேல் ஆய்வின் இலக்கை அடையமுடியாது போய்விடும்.

அதேபோல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முன்னைய முடிவுகள் சரியானவையா, உபயோ கப்படுத்தப்படும் ஆய்வு முறைகள் பொருத்த மானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஆய்வின் நோக் கத் தில் தெளிவாக இருப்பது அவசியமாகும். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இக்கட்டான சூழ்நிலையை சவாலாக ஏற்று கல்வியில் முன்னேற மாணவர்கள் முயல வேண்டும்

*பருத்தித்துறை நீதிபதி அலெக்ஸ்ராஜா அறிவுரை*

மந்திகை, ஜூலை 10

இன்றைய யுத்த சூழ்நிலை மாணவர்களின் கல்வியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும் மாணவர்கள் அதனைச் சவாலாக எடுத்து கல்வியை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா மேற்கண்டவாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஏழ்மை கல்விக்குத் தடையாக அமையமாட்டாது. கல்வி அபிவிருத்திக்குத் தடையான காரணிகளைத் தகர்த்து விட வேண்டும். மாணவர்கள் கல்வித் துறையில் தேசிய ரீதியில் சாதனைகளைப் படைக்க வேண்டும். இன்றைய பல்வேறு அபிவிருத்திகளிலும் முக்கிய பங்கெடுக்கும் பெண்கள் கல்வியில் உயர்வடைய வேண்டியது முக்கியமாகும். இப்பாடசாலை கல்வியில் முன்னணியில் திகழ்ந்து சாதனை படைத்து வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இன்றைய யுத்த காலத்திலே மாணவர்களை நல்வழிப்படுத்தி சாதனையாளர்களாக உருவாக்குவதில் பெற்றோர்கள், ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியம் வாய்ந்ததாகும். மாணவர்கள், பெற்றோரையும் ஆசிரியர்களையும் மதிக்கும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே மாணவர்களின் பல்வேறு வகையான வளர்ச்சிக்கும் வழி வகுக்கும். சமூகத்தில் மாணவர்களுக்கே முதலிடம் உண்டு. சமூகத்தில் அறிவு ஆற்றல்களால் மேம்பட்ட அறிவாளிகள் உருவாக வேண்டும்.

ஒரு காலத்தில் கல்வியால் உயர்ந்து காணப்பட்ட எமது சமூகம் இன்று அவ் வாறில்லாமல் இருப்பது கவலைக்குரியது. எமது கல்வியை மேம்படுத்த நாம் அனை வரும் இணைந்து செயற் பட வேண்டும். இன்று நாம் பாதிக் கப்பட்ட சமூக மாகப் போட்டி உலகிலே வாழ்ந்து வருகின்றோம். மாணவர்கள் இவற்றினைக் கருத்திற் கொண்டு தமது செயற்பாடுகளைச் சிறப் பாக மேற்கொள்ள வேண்டும். எமது கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய நடவடிக்கைகளை அனைத்துத் தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி வ.இராதாகிருஸ்ணன், அபிவிருத்திச் சங்க செயலாளர் கே.ஜெய பாலன், பிரதி அதி பர் திருமதி ஆர். ஸ்ரீரங்கன் ஆகி யோர் உட்பட இன் னும் பலர் உரை யாற்றினர்.

(202-218)

## 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இரு திரையரங்குகளில் சமகாலத்தில் ஒரே திரைப்படம்

யாழ்ப்பாணம், ஜூலை10

சுமார் 30 ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்.நகரில் இரண்டு திரை அரங்குகளில் ஒரே திரைப்படம் சமகாலத்தில் திரையிடப்பட்டது.

கமலஹாசன் பத்து வேடங்களில் நடித்த தசாவதாரம் என்னும் திரைப்படமே கடந்த இரண்டு வார காலமாக இரண்டு திரை அரங்குகளில் திரையிடப்பட்டது.

யாழ்.நகரில் உள்ள ஒரு திரையரங் கிலும் அதன் வளாகத்தில் புதிதாக தற்காலத்திற்கேற்ப நவீனவசதிகளுடன் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட மற்றைய திரை அரங்கிலும் இத்திரைப்படம் சமகாலத்தில் திரையிடப்பட்டது. இரண்டு வாரங்களின் பின்னர் ஒரே ஒரு திரை அரங்கில் இத்திரைப் படம் திரையிடப்பட்டு வருகிறது.

1960, 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமரர்களான எம்.ஜீ.ஆர், சிவாஜிகணேசன் நடித்த திரைப்படங்கள் சமகாலத்தில் இரண்டு திரை அரங்குகளில் ஒரு திரைப் படம் என்ற வகையில் ஏட்டிக்குப் போட்டியாக திரையிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(236)

## ஆங்கிலதினப் போட்டி

வலி.வடக்கு, ஜூலை 10

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான ஆங்கிலதினப் போட்டியில் நினைவுபடுத்திக் கூறுதல் மற்றும் பேச்சுப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளின் மாணவர்கள் உரிய நேரத்திற்கு போட்டிக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-86)

## உள்ளூராட்சி வார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுற்றாடல் விழிப்புணர்வுக் கருத்தரங்கை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைக் கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

இதில் 'பூகோளம் வெப்பமாதலும் அதன் எதிர்கால விளைவுகளும்' என்னும் தலைப்பில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் அ.உதயகுமார் கருத்துரை வழங்கவுள்ளார். (203)

## யாழ்ப்பாணப் பாடசாலைகளில்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கமாட்டாது.

கடந்தாண்டு யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்து ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சைக்கு முதல் தடவையாக ஆங்கில மொழி மூலம் தோற் றிய இருபத்தைந்து மாணவர்களும் சித்தி அடைந்துள்ளார்கள்.

இதற்கு முதலாவது அடிப்படைக் காரணம் ஆங்கில மொழியை சிறுவயதிலிருந்தே கற்கக்கூடிய வாய்ப்பு கல்லூரியில் வழங்கப்பட்டமையாகும். உரியதை உரிய வயதில் செய்யாது விட்டு விட்டு மாணவர்கள் ஆங்கில அறிவில் பின்தங்கியுள்ளார்கள் என்று தப்பித்துக்கொள்வது கல்விமான்களுக்கும் கல்வித் திணைக்களத்திற்கும் பொருந்தாது.

ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்கும் வேண்டிய ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்ய உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும். இன்று ஆங்கில மொழி மூலம் ஏனைய பாடங்களை கற்பிக்க ஆசிரியர்களை பாடரீதியாக தெரிவுசெய்து பயி[illegible]கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைப்போன்று ஆங்கிலப் பாடத்திற்கும் ஏனைய பாடங்களுக்கு நியமனம் பெற்று இருந்தாலும் ஆங்கில பாடத்தின் தேவை கருதி இந்த ஆசிரியர்களுக்கும் குறுகிய கால தொடர்பயிற்சிகளை வழங்கி பாடசாலைகளில் தேவைக்கு ஏற்ப நியமனம் செய்வதன் மூலம் மாணவர்களின் ஆங்கில அறிவை ஓரளவுக்கேனும் மேம்படச் செய்ய முடியும் என கல்வியாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதற்கு வேண்டிய எதிர்கால திட்டங்கள் தீர்மானங்களை மேற்கொள்வதும் செயல்படுத்துவதும் கல்வித் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

## தவறிவிட்டது

29.06.2008 அன்று யாழ்.தெல்லிப்பழை மினிபஸ்ஸில் செவிப்பன்னி (Ear Phone) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் கொடுத்து உதவவும்.

தியேட்டர் ஒழுங்கை, இணுவில்.

(சி/553667)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை**

மலர்வு 25.02.1922

மறைவு 23.07.2007

அன்பான ஐயா உம்மை
ஆவணியில் நாங்கள் இழந்து
இன்றுமோர் ஆண்டு கண்டும்
நினைத்துனை தொழுதோம் ஐயா

காளி கோயிலடி,
மல்லாகம்.

(சி/553673) **குடும்பத்தினர்.**

## UNIVERSITY OF JAFFNA SRILANKA

### vacancy

Applications will be received by me up to 08th August, 2008 from suitably qualified candidates for the following posts.

**1.POST: TECHNICAL OFFICER GRADE II SEG . A: U-MT1 (II)**
**Qualifications:**
National Diploma in Technology in the relevant field of specialization or its equivalent qualifications.

**Salary Scale:** Rs. 17,960 - 8x185-19,440/= p.m.
**Selection:** By Practical Test and Interview
**Age Limit:** Not more than 45 years

**Note:** Age limits is not applicable for applicants in the Government Department/State corporation and statutory bodies.

Application forms may be obtained from the Office of the Senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/= for each application form at the Peopl's Bank, University of Jaffna Branch or at the Shoroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the ***Bursar, University of Jaffna*** together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m. in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 08th August, 2008.

Application sent on the specified form only will be accepted. Applications received after the closing date will be rejected without intimation.

**STATUTORY BENEFITS:**
1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment Trust Fund benefits.
5. Free medical care.

Those who are in Public Service/Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/ Boards. Advance copies of applications may be sent the first instance However, no such applicant will be considered for appoinment if the application routed through the Head of Department is not received.

**Registrar.**
**08.07.2008**

(C/553671)


MJ MAHARAJ



உள்ளூர் VAN சேவை
1 km = Rs.40
உடன் அழையுங்கள்
222 6659, 077 3114803, 222 9653
(76094)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தா நுங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603
அனைத்துப் பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ துர்க்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567


## நன்றி நவில்கின்றோம்



எமது ஆலய புனர்நிர்மாணப்
பணிக்காக நிதியுதவி வழங்கிய
வடமாகாண விசேட செயலணித்
தலைவரும் சமூக சேவைகள்
மற்றும் சமூக நலத்துறை
அமைச்சரும் ஈ.பி.டி.பி கட்சியின்
செயலாளர் நாயகமுமான கௌரவ
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும், அவரோடிணைந்து
**அலன்ரின் சில்வேந்திரி** *(உதயன்)*
*(யாழ்.மாவட்ட சமூகசேவை இணைப்பதிகாரி)*
தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர்
**ஆசைப்பிள்ளை அலெக்ஸ்ஸாண்டர்** *(சாள்ஸ்),*
**அம்பலம் இரவீந்திரதாசன்** *(ரவீந்திரன்)*
*(முன்னாள் சமுர்த்தி மகா சங்கத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவான், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர்)*
ஆகியோருக்கு கொண்டலடி விநாயகர் அடியவர்கள் சார்பிலும்
பரிபாலனசபை சார்பிலும் மனமுவந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலனசபை,**
யா/வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம்.

(சி/553674)

## 10ஆம் ஆண்டு நினைவினில்...



மலர்வு 12 ★ 03 ★ 1925

உதிர்வு 01 ★ 07 ★ 1998

**திருமதி நல்லதம்பி புனிதவதி**

திதி: அட்டமி

அம்மா என்று இல்லையென்றால்
இம்மா நிலத்தில் நாங்களில்லை
உங்கள் நினைவோடு வாழுகின்றோம்
நீங்கள் எங்கள் தெய்வமம்மா!

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் (76112) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வெள்ளைவான் கடத்தல் கொடூரம்: தேசத்தின் மாற்ற முடியாத தலைவிதி?

கொழும்பில் தாராளமாக நடைபெறும் வெள்ளை வான் கடத்தல்களைத் தடுக்கத் துப்பில்லாத இந்த அரசு, விடுதலைப் புலிகளைத் துடைத்தழிக்கப் போவதாக மார்தட்டுவது அபத்தத்திலும் அபத்தம் என்று இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஆளும் தரப்பின் ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த அராஜகத்துக்கு - அடிப்படை மனித உரிமை மீறலுக்கு - முடிவு எப்போது என்று எண்ணிப் பொதுமக்கள், குறிப்பாகத் தமிழர்கள், பெரும் விசனப்படுகின்றார்கள்.

இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது, அதனை அடியோடு தடுத்து நிறுத்த வேண்டும் என்ற பற்றுறுதி - திடசங்கற்பம் - கருத்து நிலைப்பாடு - அரசியல் தீர்க்கம் - அரசுத் தலைமைக்கு வராதவரை இத்தகைய கொடூரங்கள் தொடரவே செய்யும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் இத்தகைய பல்வேறு கொடூரங்களுக்கும், அராஜகங்களுக்கும், அட்டகாசங்களுக்கும் யார் காரணம், யார் பின்னணி, யார் சூத்திரதாரி என்பவை எல்லாம் பொது மக்களுக்குத் தெரியாதவை அல்ல.

அதனால்தான் 'திருடனாகப் பார்த்துத் திருந்தினால் ஒழிய திருட்டைத் தடுக்க முடியாது' என்பது போல 'வெள்ளை வான் கடத்தல் சூத்திரதாரிகளும் தாங்களாகத் திருந்தினால்தான் இவ்விடயம் நேர்சீராகும்' என்று குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாறான, மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்க வேண்டிய அதிகாரத் தரப்புகளே, 'பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கை' என்ற பெயரில் இத்தகைய கொடூரங்களுக்கு அனுமதி தந்து, ஒத்தாசை வழங்கி, ஆசீர்வாதம் அளித்து வருகையில் இவற்றைத் தடுத்து நிறுத்திவிட முடியப் போவதில்லை என்பது தெட்டத் தெளிவு.

இப்போது இந்த வெள்ளைவான் கொடூரத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதைப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. நாடாளுமன்றத்தில் பச்சையாகவே போட்டுடைத்து அம்பலப்படுத்தியிருக்கின்றது.

நாட்டில் இடம்பெறும் வெள்ளைவான்களில் ஆள்களைக் கடத்தும் நடவடிக்கைகளுக்கு அரசும் இராணுவத்தினருமே பின்னணி என்று குற்றம் சுமத்தியுள்ள அக்கட்சி, இந்த வெள்ளைவான் கடத்தல்கள் தொடர்பான முழு விவரங்களையும் ஆதாரங்களுடன் தமது கட்சி விரைவில் நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும் சூளுரைத்திருக்கின்றது.

இப்படித்தான் யாழ். குடாநாட்டில் இடம்பெறும் கொடூரங்களின் சூத்திரதாரிகளை முழு விவரங்களுடன் விரைவில் நாடாளுமன்றில் அம்பலப்படுத்துவேன் என்று அறிவித்த கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான மகேஸ்வரன், அப்படி அறிவித்து இரண்டு நாள்களில் - அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னர் - அப்படி அறிவித்த குற்றத்துக்காகக் கொலையாளிகளின் துப்பாக்கிக்கு இரையானார்.

அக்கொடூரம் நடந்தது இவ்வாண்டின் முதலாவது தினத்தில். அதாவது அடுத்த ஒரு வார காலத்தில் இலங்கையின் நாடாளுமன்றம் கூட விருந்த நிலையில், அங்கு யாழ். நிலைமை பற்றிய உண்மை நிலைகளை அம்பலப்படுத்தப்போகின்றார் என அறிவித்த மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டார்.

அத்தகைய பின்புலத்திலேயே அவரது கட்சியினர் மீண்டும் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்கள். இன்று முழு இலங்கை தொடர்பாகவுமே சர்வதேசத்தின் பார்வையைத் திருப்ப வைத்துள்ள வெள்ளைவான் கொடூரம் பற்றிய மர்மங்களைப் பகிரங்கப்படுத்தப் போவதற்கான முன்னறிவிப்பு இது.

இந்த அறிவித்தலின் விளைவு என்னென்ன விபரீதங்களைக் கொண்டுவரப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இதேபோல அரசுப் பாதுகாப்புத் தரப்பின் உள்வீட்டு மாய்மாலங்களையும், பாதுகாப்புத் துறையில் இடம் பெறும் ஊழல்கள், மோசடிகள், ஒழுங்கு முறைகளுக்கு மாறான செயற்பாடுகள், குத்து வெட்டுகள், குளறுபடிகள் போன்றன குறித்தும் தென்னிலங்கையில் உண்மைகளை அம்பலப்படுத்த முயன்ற 'குற்றத்துக்காக' ஊடகவியலாளர்கள் பலரும் ஊடகங்கள் பலவும் 'வாங்கிக் கட்டிக் கொண்டு' வாயை மூடி அடங்கியிருக்கும் பரிதாபம் ஒருபுறம் நீடிக்கின்றது.

'புலிப் பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதத்தால் வெற்றி கொள்வது' - என்ற விபரீதமான கொள்கைப் போக்கைக் கொழும்பு அரசு தனக்குள் நியாயப்படுத்திக் கடைப்பிடிப்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பது வெளிப்படை.

தன்னை சட்ட ரீதியான - இறைமையுள்ள - அரசு என்று கூறிக்கொண்டே இப்படி ஒளிவு, மறைவான 'அரச பயங்கரவாதத்திற்கு ' ஆளும் தலைமை இடம் கொடுக்குமானால், இத்தகைய வெள்ளைவான் கொடூரம் போன்றவை இலங்கையில் தொடர்வது நாட்டின் தவிர்க்கவே முடியாத தலைவிதியாகவே இருக்கும். அதை எதிர்கொண்டு அனுபவிப்பதும் நாட்டு மக்களுக்குக் கட்டாயமானதாகவும் அமையும்.

'அரச பயங்கரவாதம்'சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு விவகாரமாக மாறியுள்ள தேசத்தில் இதுதான் யதார்த்தம். 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரம்' என்று தவறாகவா சொன்னான் பாரதி?

# தமிழகத்தில் இருந்து பீடி கடத்தியவர்களுக்கு எதிராக சுங்கத் திணைக்களமே வழக்குத் தொடரமுடியும்

## மல்லாகம் நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை10

தமிழகத்தில் இருந்து மன்னாருக்கு சுமார் ஒரு லட்சம் பீடிகளை கடத்தி வந்தார்கள் எனக்கூறி காங்கேசன்துறைக் கடலில் வைத்துக் கைதான மூவர் மீதான வழக்கை சுங்கத் திணைக்களமே தாக்கல் செய்ய வேண்டும் என்று மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டிருக்கின்றார்.

மன்னாரைச் சேர்ந்த மூவர் தமிழகத்தில் இருந்து கடந்த ஏப்ரல் மாதம் மூன்று படகுகளில் பீடி கடத்திக் கொண்டு வந்ததாகக் கூறி காங்கேசன் துறைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப் பட்டிருந்தனர்.

அவர்கள் மூவரையும் கடற்படையினர் காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். பொலீஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்திருந்தனர்.

அவர்கள் மூவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

மூவர் மீதான குற்றச்சாட்டுகளும் மீண் டும் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணையில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதன்போது, இவர்கள் மீதான வழக்கை பொலிஸார் தாக்கல் செய்ய முடியாது. சுங்கத் திணைக்களமே தாக்கல் செய்ய முடியும் என்று தெரிவித்த நீதவான் வழக்கைத் தாக்கல் செய்யுமாறு சுங்கத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டார்.

கைதான மூவரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (203)

# நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழா குறித்த கலந்துரையாடல்

நல்லூர், ஜூலை 10

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மாநகராட்சி மன்ற ஆணையாளர் தலைமையில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சுகாதாரம், குடிதண்ணீர், மின்சாரம், போக்குவரத்து போன்ற முக்கிய விடயங்கள் இதன்போது ஆராயப்படவுள்ளன.

மாநகரசபை திணைக்கள அதிகாரிகள், ஆலய அறங்காவலர்கள், இலங்கை மின்சாரசபை, வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள், பொலிஸ், தொண்டர் நிறுவனத்தினர், தனியார் வாகன போக்குவரத்துச் சங்கத்தினர் ஆகியோரை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை செயலாளர் இ.இரத்தினசிங்கம் கேட்டுள்ளார்.

(202-111-302)

# ஊரடங்கை மீறியவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை10

ஊரடங்கு உத்தரவை மீறி மூளாய், மானிப்பாய் ஆகிய இடங்களில் நடமாடியபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆறுபேரும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றத் தால் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர்.

கடந்த ஐந்தாம் திகதி ஊரடங்கு உத்தரவை மீறி இரவு 11 மணியளவில் நடமாடினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூளாய், முங்கோடையில் ஐந்துபேரும் மானிப்பாய் பகுதியில் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஆறுபேரும் கடந்த ஆறாம் திகதி மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

சம்பந்தப்பட்டவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இவர்கள் மீண்டும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆறுபேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் அவர்களை எச்சரித்து விடுதலை செய்தார். (203)

# மென்பொருள் இறுவட்டுக்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை 10

யாழ்.கல்வி வலையத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் கணனி மென்பொருள் போட்டிக்கு தயாரித்துள்ள இறுவட்டுக்களை உடனடியாக கல்வி வலயத்தின் அபிவிருத்திப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

அதிபர்கள் நாளை மறுதினம் முன்னராக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக் குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-302)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 10

கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரணையுடன் அறவழி நிலையத்தினால் நடத்தப்படும் தொழிற்பயிற்சிகளில் பங்குபற்றுவோருக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி நுணாவிலில் உள்ள அறவழி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், அலுமினியம் பொருத்துதல், மின்வாயு ஒட்டு ஆகிய பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவோரை செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவன திட்ட அலுவலர் க.திருநீபன் இச் செயலமர்வில் கலந்து கொண்டு செயற்றிட்டங்கள் தொடர்பாக உரையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 10

கொடிகாமம் பிரதேச முன்பள்ளிகளின் கண்காட்சி நாளைமறுதினம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளின் கண்காட்சி எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

முன்பள்ளிகளின் சிறார்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன என தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா தெரிவித்தார். இக் கண்காட்சிகளை தென்மராட்சிப் பிரதேச செயலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) கோ.வரதராசமூர்த்தி ஆரம்பித்து வைப்பார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 10

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பு (CHA) நடத்தும் நடமாடும் இலவச சட்டசேவையும், சட்டம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளன.

தொல்புரம் மேற்கு வீராவத்தை வள்ளுவர் சனசமூக நிலைத்தில் நடைபெறவுள்ள இச்சேவையில் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சட்டசேவை தேவைப்படும் மக்கள் பயன்பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள இந்து நாகரிகத்தை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கு இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

(203)

# மனித உரிமை ஆணைக்குழு வாகனத்தில் ஆயுதங்கள் மீட்பு: விசாரணைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 10

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக வாகனத்திலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் தொடர்பான விசாரணைகள் இதுவரை பூர்த்தியாகவில்லையென மானிப்பாய் பொலீஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக வாகனம் ஒன்று திருத்த வேலைகளுக்காக மானிப்பாயில் உள்ள 'கராஜ்' ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்தது.

அந்த வாகனத்திலிருந்து மானிப்பாய் பொலிஸாரால் ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாகனத்தின் சாரதியான நாகரத்தினம் சசிதரன் (சட்டநாதர் வீதி, நல்லூர்), கராஜ்ஜில் பணிபுரிந்தவர்களான கந்தையா மகேந்திரராஜா (வி.கே.லேன், மானிப்பாய்), கதிரவேலு [illegible]ணரத்தினம் (சுதுமலை), கந்தசாமி வாகீசன் (வட்டுக்கோட்டை தெற்கு) ஆகியோர் கடந்த மாதம் 28ஆம் திகதி பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதி வான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

அப்போது சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் இதுவரை பூர்த்தியாகவில்லையெனப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (203)

# நிவாரணம் விநியோகம்

நவாலி,ஜூலை 10

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் இடம்பெயர்ந்த முத்திரைக்குரிய 'இ'காட் வைத்திருப்பவர்களுக்கும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வெள்ளை காட் வைத்திருப்பவர்களுக்குமான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் பங்கீட்டு அட்டைக்கு 3 கிலோ குத்தரிசி பணத்திற்கு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (202-100)

# நாளை

| | |
|---|---|
| ஆனி 27 | 11.07.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | நவமி |
| | பி.இ. 03.43 வரை |
| நட்சத்திரம் : | சித்திரை |
| | பி.ப. 02.00 வரை |
| [illegible] : | 05.59 - 07.29 |
| ராகுகாலம் : | 10.29 - 11.59 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி அறிவித்தல்

## மக்கள் வங்கி - பருத்தித்துறைக் கிளை - 285

12.07.2008 சனிக்கிழமை பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கும் அரை கி.மி அண்மையில் அமைந்த வீட்டுடன் கூடிய ஆதனத்தின்

**ஏலவிற்பனை நடைபெறமாட்டாது**

என்பதை அறியத்தருகின்றேன்.

*692, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், 09.07.2008* (சி/553676)

**கே.பி.பாலகிருஷ்ணன்,**
*அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர், நீதிமன்ற ஆணையாளர்.*

---

## யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ/து)

Regd No.: N/J/75 திருநெல்வேலி

### மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்

காலம் : 20.08.2005 31.12.2005
01.01.2006 31.12.2006
01.01.2007 31.12.2007

1. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கு
2. யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சமாச இணை அங்கத்தவர்களுக்கு
3. ஏனைய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையுடன் தொடர்புடையோருக்கு

மேற்படி காலங்களுக்கான கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு வசதியாக மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்கள், தகவல்கள் ஏதாவது இருப்பின் 25.07.2008 ஆம் திகதிக்கு முன்னதாக கீழுள்ள விலாசத்துக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் சமாசத்தோடு தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் குறிப் பிட்ட 31.12.2005, 31.12.2006, 31.12.2007 திகதிகளில் சமாசத்திற்கு சென்மதி, வருமதி மீதிகள் இருப்பின் அதனை உறுதிப்படுத்தி தெரியப்படுத்துமாறு இத்தால் கேட்டுக் கொள்கின்றோம்.

தவறும் பட்சத்தில் சமாசத்தில் உள்ள கணக்குப் புத்தகங்களின் படி கணக்குகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**கணக்காய்வாளர்கள்:**
**சு.பாலச்சந்திரன்** சிரேஷ்ட கணக்காய்வாளர்
**வை.கைலைநாதன்** உதவிக் கணக்காய்வாளர்.

கூட்டுறவு அலுவலகம்,
இல.857, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி/553675)

---

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1000 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கும்பம் **16 21 38 45**

**08-07-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4913628 - 4929685

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 352,271 | 10/- | 3,522,710/- |
| 2 இலக்கங்கள் | 32,368 | 20/- | 647,360/- |
| 1 இல. + லக்கினம் | 32,015 | 30/- | 960,450/- |
| 2 இல. + லக்கினம் | 2,895 | 100/- | 289,500/- |
| 3 இலக்கங்கள் | 865 | 500/- | 432,500/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | |
| மொத்தம் | | | 6,707,520/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 420,495 | | 7,207,520/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,786,600/-

தொடர் இல. 5814929 க்கு மேற்பட்ட சீட்டிழுப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூலை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 4923012-7-71 |
| களுத்துறை | 4915913-2-74 |
| கொழும்பு | 4928928-4-11 |
| கொழும்பு | 4929355-8-07 |
| திருகோணமலை | 4921636-4-29 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

---

## விற்பனைக்கு

சுத்தமான வடகம், கஜு விதைகள், கலர் மீன்கள், மோர் மிளகாய், வேப்பம்பூ என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு : **ந. வரதராசா**
*இல.16, ஆடியபாதம் வீதி, நல்லூர்.*
(கல்வியங்காட்டுச் சந்தி பாக்கியம் மில் அருகில்). (76136)

## ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தேவை

தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையிலான ஆரம்பக்கல்வி வகுப்புகளில் கற்பிக்கக்கூடிய பெண் ஆசிரியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
**K. அற்புதராஜா,**
கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (76134)

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கு ஏற்றது.

தொடர்பு: **திருமதி வீ. ஜெயதிலகன்,**
*விவாகப் பதிவாளர் இல்லம்,*
*110/9, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.* (76133)

## மரண அறிவித்தல்

*செல்வன்*
*பிரசன்னா பாலசுப்பிரமணியம்*

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரசன்னா பாலசுப்பிரமணியம் 05.07.2008 கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் நவாலி, மானிப்பாயைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம்- விஜயலக்ஷ்மி தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் தம்பதியர், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் திருமதி செல்வமலர் சிவஞானசுந்தரம் ஆகியோரின் பேரனும் சுகன்ஜா, குபேரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2008) கனடாவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி யோகராசா (கொழும்பு).

தொடர்புகளுக்கு:
001-9056839290 (சி/553679)

### முன்பள்ளிகளின் சிறார்களுக்கு சத்துணவு

யாழ்ப்பாணம், ஜூலை10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் முன்பள்ளிகளின் சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கென போரூட் நிறுவனத்தினர் கடலை, அவல், பயறு, ஜீவாகாரம், சீனி, ஆகியபொருள்களை வழங்கியுள்ளனர்.

இப் பொருள்கள் கடந்த திங்கட்கிழமை அந்தந்த முன்பள்ளி ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டன.

(202- 207)

### விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை10

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளனர்.

இப்போட்டி இன்று காலை நகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக ளில் நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகள் கலந்து கொள்ளவுள்ளன எனதாக நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார்.

(202- 207)

---

## நன்றி நவில்கிறோம்



எமது ஆலய புனர்நிர்மாணப் பணிக்காக நிதியுதவி வழங்கிய சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமுமான கௌரவ **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயப் பரிபாலன சபை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய பரிபாலன சபை,**
**ஊர்காவற்றுறை கிழக்கு, முதலாம் வட்டாரம்.** (76137)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

வலிகாமம் கிழக்கு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து), கோப்பாய்
**12.07.2008**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 12.07.2008 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்குச் சங்கத்தின் தலைவர் கா. சிவபாலன் அவர்களது தலைமையின் கீழ் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இவ்வறிவித்தலினை அழைப்பாக ஏற்று தவறாது குறித்த நேரத்திற்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**மு.சிவசுந்தரலிங்கம்,**
செயலாளர். (76138)

## மரண அறிவித்தல்

**பிள்ளையினார் ரவீந்திரன்**



நிர்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையினார் ரவீந்திரன் (08.07.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பிள்ளையினார் தம்பதியரின் அன்பு மகனும் யோகராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னர் மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவராசா, நல்லம்மா மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பஜிதரனின் அன்புத் தந்தையும் டெனிசாவின் அன்பு மாமனும் தனிகையின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2008) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிர்சாமம், சங்கானை. (76135)

தகவல்: குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 23 06 1934



உதிர்வு 10 06 2008

## திருமதி கிருஷ்ணர் நேசம்

அமுத சுரபியாய் அருகிருந்து அரவணைத்த அன்புத் தெய்வமே!
ஒரு திங்கள் மறைந்ததுவோ! நீ எமைப்பிரிந்து!
நித்தமும் உன் நினைவுகள் நிழலாக தொடர்கின்றன எம் வாழ்வில்
நேசம் எனும் பெயர்கொண்டு பாசமழை பொழிந்த
பொன்னனமே நிலவே! பரிதவிக்கின்றோம் உனை பாராது!
பரந்தாமனின் பாதாரவிந்தங்களில் நின் ஆன்மா
சாந்திபெற வேண்டுகின்றோம் அம்மா! ஆண்டென்றும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவி காலமான செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள், ஒத்தாசை வழங்கியோருக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டோர் மற்றும் அனுதாபம், ஆறுதல் கூறி அஞ்சலி தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (10.07.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பயித்தோலை,
தெற்கு, அச்சுவேலி. (சி/553677)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பிப் பிழைக்குமா இந்திய அரசு?

புதுடில்லி, ஜூலை 10

அணுசக்தி ஒப்பந்தப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு இடதுசாரிகளின் ஆதரவு வாபஸானதால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்துக்கு அது தள்ளப்பட்டுள்ளது. இதற்காக நாடாளுமன்ற அவசரக் கூட்டம் கூட்டப்படுகிறது. மத்திய அரசே நம்பிக் கைப் பிரேரணை யைத் தாக்கல் செய்து வாக்கெடுப்பைச் சந்திக்கலாம். அல்லது எதிர்க்கட்சிகள் மத்திய அரசு மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டுவரக் கூடும். அதன்மீதும் வாக்கெடுப்பு நடக்கும்.

நாடாளுமன்றத்தில் அரசு தனது பலத்தை நிரூபிக்க சிறிய கட்சிகளின் தயவு தேவைப்படுகிறது. ஆனால், அக்கட்சிகள் ஆதரவு அளிக்க நிபந்தனை விதிப்பதால் மக்களவையில் நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பில் மத்திய அரசு தப்புமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

543 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் குறைந்தபட்ச பெரும்பான்மையை 272 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் உள்ள காங்கிரஸ் (153 எம்.பிக்கள்), ராஷ்டிரீய ஜனதாதளம் (24), தி.மு.க. (16), தேசியவாத காங்கிரஸ் கட்சி (11), பா.ம.க. (6), ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (5), லோக் ஜனசக்தி கட்சி (4), கேரள காங்கிரஸ் (2), முஸ்லிம்லீக் கேரள மாநில குழு, குடியரசு கட்சி, சிக்கிம் ஜனநாயக முன்னணி,தேசிய லோக்தந்திரிக் கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி (தலா 1) ஆகிய அனைத்து கட்சிகளையும் சேர்த்தால் 226 எம்.பிக்கள் பலம் வருகிறது.

இவர்கள் அத்தனை பேரும் மத்திய அரசை ஆதரித்து வாக்குப் போடுவார்கள். சமாஜ்வாதக் கட்சியின் 39 எம்.பிக்களும் மத்திய அரசை ஆதரித்து வாக்குப் போடுவார்கள். இந்த ஆதரவு எண்ணிக்கையை கூட்டினால் 265 எம்.பிக்கள் பலம் வருகிறது. எனவே, குறைந்தபட்ச பெரும்பான்மைக்கு இன்னும் 7 எம்.பிக்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

இதற்கு சிறிய கட்சிகளின் ஆதரவைத் திரட்ட காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. ஆனால் எந்த அணியிலும் இடம்பெறாத கட்சிகள், தங்கள் நிலையை இன்னும் முடிவு செய்யவில்லை. உதாரணமாக, தேவகவுடாவின் மதசார்பற்ற ஜனதாதளத்துக்கு 3 எம்.பிக்கள் உள்ளனர். வாக்கெடுப்புக்கு முந்தைய தினம் தான் முடிவு செய்யப்போகிறார் என தேவகவுடா கூறியுள்ளார். 3 எம்.பிக்களைக் கொண்ட ராஷ்டிரீய லோக்தளத்தின் தலைவர் அஜீத்சிங், பொறுத்திருந்து பார்த்து முடிவு செய்யப்போகிறார் எனக் கூறியுள்ளார்.

இதுபோல், 3 எம்.பிக்களை கொண்ட தெலுங்கானா ராஷ்டிர சமிதி, 2 எம்.பிக்களைக் கொண்டதேசிய மாநாட்டு கட்சி, 2 எம்.பிக்களைக் கொண்ட அசாம் கன பரிஷத், தலா ஒரு எம்.பியைக் கொண்ட திரிணாமுல் காங்கிரஸ், மிசோ தேசிய முன்னணி, அகில இந்திய மஜ்லிஸ் - இ - இதேகதுல் முஸ்லிமின், பாரதீய நவசக்தி கட்சி, நாகாலாந்து மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இன்னும் தங்கள் நிலையை முடிவு செய்யவில்லை.

காஷ்மீரைச் சேர்ந்த துப்ஸ்தான் சேவாங், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஹரீஷ் நாக்பால், மணிப்பூரைச் சேர்ந்த சரரேனமி மணி ஆகியோரின் ஆதரவை மத்திய அரசு எதிர்பார்த்துள்ளது. சமாஜ்வாதக் கட்சியில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட ராஜ்பாப்பர், பேணிபிரசாத் வர்மா, மதச்சார்பற்ற ஜனதாதளத்தில் இருந்து நீக்கப்பட்ட ஏ.நரேந்திரா ஆகியோரின் ஆதரவையும் மத்திய அரசு எதிர்பார்த்துள்ளது.

வாக்கெடுப்புத் திகதி நெருங்கும்போது தான் மேற்கண்ட கட்சிகள் மற்றும் எம்.பிக்களின் நிலை தெரியவரும்.

இடதுசாரிக் கட்சிகளின் 59 எம்.பிக்களும் மத்திய அரசுக்கு எதிராக வாக்களிப்பார்கள். பா.ஜனதாவின் 130 எம்.பிக்களும், பகுஜன் சமாஜ் கட்சியின் 17 எம்.பிக்களும் மத்திய அரசுக்கு எதிராக வாக்களிப்பார்கள்.

ம.தி.மு.கவுக்கு 2 எம்.பிக்கள் உள்ளனர். அவர்கள் அரசை எதிர்த்து வாக்களிப்போம் என அறிவித்துள்ளனர்.

12 எம்.பிக்களைக் கொண்ட சிவசேனாவும், 8 எம்.பிக்களைக் கொண்ட அகாலி தளமும், 11 எம்.பிக்களைக் கொண்ட பிஜு ஜனதாதளமும் மத்திய அரசை எதிர்த்து வாக்கு அளிக்கப்போகின்றன என அறிவித்துள்ளன. 3ஆவது அணியில் இடம்பெற்றுள்ள தெலுங்கு தேசம் (5 எம்.பி.), ஜார்கண்ட் விகாஸ் மோர்ச்சா (ஒரு எம்.பி.) ஆகியவை அரசை எதிர்த்து வாக்களிக்க வுள்ளன.

இந்த வகையில், எதிர்ப்பு வாக்குகளின் பலம் 243ஆக உள்ளது. இன்னும் தங்கள் நிலையை முடிவு செய்யாத கட்சிகளின் நிலையைப் பொறுத்து, எந்தத் தரப்பு வெற்றி பெறும் என்று தெரியவரும்.

இதில் மத்திய அரச தப்புமா என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வி.

# இடதுசாரிகள் ஆதரவு வாபஸானதை அடுத்து கட்சியினருடன் சோனியா அவசர ஆலோசனை



புதுடில்லி, ஜூலை 10

மத்திய அரசுக்கு இடதுசாரிகள் வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்ற நிலையில் காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளுடன் சோனியா நேற்று முன்தினம் அவசர ஆலோசனை நடத்தினார் எனக் கூறப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு-

மத்திய அரசுக்கு வெளியிலிருந்து அளித்து வந்த ஆதரவை இடதுசாரிகள் வாபஸ் பெற்றுவிட்டனர். இதைத் தொடர்ந்து மத்திய அரசுக்கு நெருக்கடி முற்றியுள்ளது. சமாஜ்வாதக் கட்சி ஆதரவு அளித்த போதிலும் மத்திய அரசுக்கு பெரும்பான்மை இல்லை. எனவே சிறிய கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை இடதுசாரிகள் கூட்டத்தில், 'வாபஸ் அறிவிப்பு' வெளியானது, இது குறித்து தகவல் அறிந்த உடனேயே, காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் சோனியா அவசர ஆலோசனை நடத்தினார். சோனியா வீட்டில் நடந்த அந்தக் கூட்டத்தில், அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இடதுசாரிகள் வாபஸ் பெற்றுவிட்டதால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. எனவே, நாடாளுமன்ற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டமும் கூடியது. அந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரை எப்போது கூட்டுவது என்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டம் குறித்து வெளியான தகவல்களின்படி, நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்துவதற்காக சிறப்பு நடாளுமன்றக் கூட்டத்தை கூட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் 28ஆம் திகதியன்று நாடாளுமன்றம் கூடுகிறது. அதே நாளில் தான் சர்வதேச அணுசக்திக் கழகத்தின் வாரிய உறுப்பினர்கள் கூட்டம் வியன்னா வில் நடைபெறுகிறது.

இதற்கிடையே அரசுக்கு பெரும்பான் மை இருக்கிறது என காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். காங்கிரஸ் மூத்த தலைவரும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சருமான வலயார் ரவி கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் பெரும்பான் மையை நிரூபிப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு பிற அரசியல் கட்சிகளிடமிருந்து போதுமான ஆதரவு கிடைத்திருக்கின்றது. பாரதீய ஜனதாவின் தந்திரங்கள் குறித்து நாங்கள் அறிவோம். கர்நாடகாவில் நடந்தது போல தேசிய அரசியலிலும் பண அரசியலை நடத்த அந் தக் கட்சி முடிவு செய்துள்ளது.

இடதுசாரிகளின் ஆதரவு வாபஸ் முடிவால் பாரதீய ஜனதாக் கட்சிதான் ஆதாயம் அடையும். பா.ஜனதாவுடன் சேர்ந்து இடதுசாரிகள் வாக்களிப்பது நல்லது அல்ல - என்றார்.

**இடதுசாரிகளின் முடிவு எதிர்பார்த்தது தான்**

காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பிரிவுத் தலைவர் வீரப்ப மொயலி கூறுகையில்,

'நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் இடதுசாரிகள் ஆதரவை வாபஸ் பெறுவார்கள் என்பது நாங்கள் எதிர்பார்த்ததுதான். வாபஸ் பெற்றாலும் நாட்டு நலன் எதுவும் இல்லை. வெறும் தேர்தல் தந்திரம்தான். பிரதமர் இந்தியாவில் இல்லாத சமயத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கக்கூடாது' - என்றார்.

செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் கூறும்போது, 'நாடாளுமன்றத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை சமாஜ்வாதக் கட்சி ஆதரித்தால் நம்பிக்கை வாக்கெடுப்பில் மத்திய அரசு வெற்றிபெறும்' - என்றார். மற்றொரு செய்தித் தொடர்பாளர் மணீஷ் திவாரியும் இதே கருத்தைத் தெரி வித்தார்.

ரஷ்டிரீய ஜனதா தள தலைவரும் ரயில்வே அமைச்சருமான லாலு பிரசாத் கூறுகையில், 'அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஒவ்வொரு தகவலையும் இடதுசாரிகளுக்குத் தெரிவித்தோம். நாட்டு நலனுக்கு அணுசக்தி ஒப்பந்தம் மிக்வும் அவசியம். பிரதமர் வெளிநாட்டில் இருக்கும்போது இத்தகைய முடிவை இடதுசாரிகள் எடுத்திருக்கக்கூடாது. அவர் திரும்பும் வரையிலிலாவது பொறுத்து இருக்கலாம். மத்திய அரசுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. போதுமான எம்.பிக்களின் ஆதரவு உள்ளது' - என்றார்.

# அமெரிக்காவுடனோ இஸ்ரேலுடனோ ஈரான் ஆயுத மோதல்களில் ஈடுபடாது!

## ஜனாதிபதி அஹ்மதி நிஜாத் நம்பிக்கை



தெஹ்ரான், ஜூலை 10

"ஈரானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஆயுதப் போராட்டம் நிகழும் என்பதற்கில்லை. அதுபோல இஸ்ரேலுக்கும் எமக்குமிடையே ஆயுதப்போராட்டம் மூளும் என சொல்வதற்கில்லை" - என ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநிஜாத் மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கோலாலம்பூரில் நிகழ்ந்த அபிவிருத்தியடைந்துவரும் டி-8 இஸ்லாமிய நாடுகளின் உச்சி மாநாட்டின், இறுதி அமர்வில் கலந்து கொண்டு அஹ்மதிநிஜாத் உரையாற்றினார். எதிர்காலத்தில் எந்த ஒரு யுத்தமும் இடம்பெறமாட்டாது. இதனை நான் உத்தரவாதப்படுத்துகிறேன்' - என்றும் அவர் கூறினார்.

"ஈரான் மீது போர்தொடுக்க அமெரிக்க மக்கள், ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு அதிகாரமளிக்கமாட்டார்கள் என நான் நம்புகிறேன். ஈரான் மீதான அத்தகையதொரு தாக்குதல் 'அரசியல் தற்கொலையாகவே முடியும்' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''இத்தகைய தாக்குதலில் ஈடுபட, பொருளாதார, அரசியல், இராணுவ நிலைவரங்கள் புஷ்ஷை அனுமதிக்கமாட்டா. அதேவேளை, ஈரான் தன்னைத் தற்காத்துக்கொள்வதற்குத் தயாராகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

அமெரிக்காவின் தலையீடு இதர நாடுகளில் இடம்பெறுவதே மத்திய கிழக்கிற்கும், முழு உலகுக்குமே மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. மத்திய கிழக்கைப் பொறுத்தமட்டில், இஸ்ரேல் - அமெரிக்கக் கூட்டுக்கு எதிராக ஈரான் தாக்குதலை மேற்கொள்ளாது' - என்றும் அஹ்மத் நிஜாத் தெரிவித்தார்.

"இஸ்ரேலிய சியோனிஸ ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்கான எந்தத் தேவையும் ஈரானியருக்குக் கிடையாது' என்றும் அவர் குறிப்பிட்டார். இச்சமயத்தில், இஸ்ரேல் அரசையோ யூத மக்களையோ நீங்கள் வெறுக்கிறீர்களா? என அவரிடம் கேள்வி தொடுக்கப்பட்டது.

அதற்கு இவர் பதிலளிக்கையில்,

"சியோனிஸத்தை நாம் வெறுக்கின்றோம். அப்படியானால் நாங்கள் யூதர்களை வெறுக்கின்றோம் என அர்த்தம்கொள்ளக்கூடாது. ஈரானிலும் யூதர்கள் வாழ்கிறார்கள். அவர்களும் எங்கள் நாட்டு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள்" - என்றார்.

# புவி வெப்பமடைதலை தடுக்க நடவடிக்கை

சப்போரா, ஜூலை 10

புவி வெப்பமடை தலைத் தடுக்க 2050ஆம் ஆண்டுக்குள் பசுமைக் குடில் வாயு வெளியேற்றத்தை (காற்று மண்டலத்தை பாதிக்கும் வாயுக்கள்) கட்டுப்படுத்தவும் ஜீ-8 நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

ஜீ-8 மாநாட்டில் சிறப்புப் பார்வையாளர்களாக பங்கேற்றுள்ள இந்தியா உள்ளிட்ட 5 வளரும் நாடுகள், புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்கு கடுமையான உத்திகளைக் கையாளவேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தின.

ஜப்பானில் உள்ள சப்போரோ நகரில் ஜீ-8 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ள கூட்டம் நடைபெற்று வருகிறது. செவ்வாய்க்கிழமை முடிவுற்ற கூட்டத்துக்குப் பிறகு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:-

யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஜீ - 8 நாடுகள் வலியுறுத்தியுள்ளன. பிரச்சினையைப் பேச்சு மூலம் சுமுகமாகத் தீர்க்க ஒத்துழைப்பு அளிக்குமாறும் ஜீ-8 தலைவர்கள் கேட்டுகொண்டனர். அதேபோல், அணு ஆயுதங்களைக் கைவிட்டு, அணுசக்தித் திட்டங்களை சோதனையிடுவதற்கு முழு ஒத்துழைப்புத் தருமாறு வடகொரியாவுக்கு ஜீ-8 தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# ஆறுதல் அடைவோம்



**திருமதி ஞானப்பூங்கோதை தியாகராசா**

*அன்புள்ள சின்னத்தான், கங்கா*

*அன்புள்ள மனைவி, ஆசையம்மாவை இழந்து தவிக்கும் உங்கள் அன்பு நெஞ்சங்களுக்கு எமது வார்த்தைகள் கிஞ்சித்தும் ஆறுதல் தரா. இருப்பினும் சொல்லாலும் செயலாலும் முற்றுப் பெற முடியாமல் அவர் விட்டுச் சென்ற அபிலாசைகளை செவ்வனே செய்து முடிப்பதற்கு அவர் எம்மைப் பிரிந்து சென்றுள்ளார் என்பதை உணர்ந்து ஆறுதல் அடைவோமாக.*

ஸ்ரீபதி குடும்பம்,
கோண்டாவில்.

# மரண அறிவித்தல்

## கந்தையா சுந்தரலிங்கம்



மட்டக்களப்பு, பெரியபோரதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், 625, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் (08.07.2008) செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா.- தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், அருட்செல்வி, பிரியதர்ஷினி (கிளிநொச்சி), சத்தியப்பிரியா, மதிவதனி, கங்காயினி, நிறோஜினி, சாரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.07.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*625, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.*

(76203)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# பாக்குநீரிணையை நீந்திச் சாதனைபுரிய 4 வயதான தமிழகச் சிறுமிக்கு ஆசை!

## ஜனாதிபதி பிரதீப்பாவிடம் அனுமதி கேட்டார்

சென்னை, ஜூலை10

தமிழ் நாட்டைச் சேர்ந்த 4 வயதுச் சிறுமி நவசக்தி என்பவர் இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனைபுரிய அனுமதி கோரியுள்ளார்.

இந்தத் தகவலை அச் சிறுமியின் தாயார் இந்துமதி வெளியிட்டார்.

தமிழகம், திருமலையைச் சேர்ந்த இச் சிறுமி இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதீப்பா பாட்டீலை சந்திப்பதற்காக தாயாருடன் திருப்பதிக்கு வந்திருந்தார். திருப்பதியில் வழிபாட்டுக்காக வந்திருந்த திருமதி பாட்டீல் சிறுமியின் சாதனைகள் பற்றிய சான்றிதழ்களையும் பதக்கங்களையும் பார்த்துவிட்டு பாராட்டுக்கள் தெரிவித்தார். மேலும் தேசிய விளையாட்டு நிதியிலிருந்து அவருக்கு உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்ய முயற்சிப்பதாகவும் தாயாரிடம் உறுதியளித்தார்.

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக் கரைவரையான 33 கி.மீ.தூரத்தை நீந்திச் சாதனை புரிவதற்கான அனுமதியையும் தாங்கள்பெற முயன்றுவருவதாக இந்துமதி தெரிவித்தார்.

இதற்கு முன்னர் பாக்குநீரிணையை, வடமராட்சியைச் சேர்ந்த நவரத்தினசாமியும், ஆழிக்குமரன் ஆனந்தனும் நீந்திக் கடந்து சாதனைபுரிந்தனர் என்பது தெரிந்ததே. (ப)

## குடியிருப்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் விவரம், வீட்டில் தங் கியுள்ள ஏனையோரின் விவரங்கள் என்பன விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்டுள்ளன.

குடியிருப்பாளர் பட்டியலில் பெயர் பதியப்படாத எவரும் குறிப்பிட்ட வீட்டுக்குத் தங்குவதற்கு வந்தால், அந்த வீட்டின் பிரதான குடியிருப்பாளர் அது குறித்து சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அறிவிக்க வேண்டும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-50)

## வேலை நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றது.

ஜே.வி.பியின் எம்பியும் இன்றைய வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்திருக்கும் ஜே.வி.பி. தொழில் சங்கத்தின் தலைவருமான லால் காந்தவே நேற்று நாடாளுமன்றத்தில் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் ஏற்பாடு செய்திருக்கும் வேலை நிறுத்தம் நீதியானது. தற்போதைய விலைவாசிக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பைக் கோரி இந்த வேலை நிறுத்தம் ஏற்பாடு செய்யப்படவில்லை.

அப்படிப் பார்த்தால் 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு போதாது. மேலும் தேவைப்படும். ஆனால் நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு நீதியான முறையிலேயே நாம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறோம்.

இந்தச் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையுடன் தொடர்புபட்ட கோரிக்கைகளை நாம் ஜனாதிபதிக்கு மே மாதம் 28ஆம் திகதி அனுப்பி வைத்தோம்.

இதற்கு ஜனாதிபதியிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. அரசின் கவனத்தை இது தொடர்பில் ஈர்ப்பதற்காக நாம் ஆர்பாட்டம் ஒன்றையும் நடத்தினோம். அதன் பிறகே வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தோம்.

### போராட்டத்தைத் தடுக்கச் சதி

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பார்த்த அரசு மிகவும் பயந்துபோயுள்ளது. சதி நடவடிக்கை மூலம் போராட்டத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

எந்தவித சதி நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் நாம் இதிலிருந்து பின்வாங்க மாட்டோம். தொழிற்சங்கங்களுடன் மோதுவதை ஜனாதிபதி நிறுத்த வேண்டும்.

அவ்வாறு மோதினால் அரசின் பயணத்திற்கு முற்றுப்பபுள்ளி வைக்கும் இறுதி நாளாக 10ஆம் திகதி அமைந்துவிடும்.

எமக்கு ஏதும் நேர்ந்தால் எமக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் தொழில் சங்கங்களையும் இணைத்துக் கொண்டு அடுத்த நடவடிக்கை தொடர்பாக 11ஆம் திகதி தீர்மானம் ஒன்று எடுக்கப்படும்.

இந்த வேலை நிறுத்தத்தில் நாம் வெற்றி பெறுவோம். இதையாராலும் தடுக்க முடியாது - என்றார். (சி)

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

வவுனியா முன்னரங்க காவலரணிற்கும் மாந்தை மேற்கு பகுதிக்கும் இடையில் இடம்பெறும் ஷெல் தாக்குதல் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன எனக் கிளிநொச்சிப் பிரதேச செயலகம் தெரிவிக்கின்றது.

இவர்கள் அக்கராயன், பூநகரிப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வன்னிக்குள் அனுமதிக்கப்படும் பொருள்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் கடுமையான மோதல் காரணமாக உருவாகியுள்ள மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பது கடினமாகியுள்ளது.

வன்னிக்குள் தற்போது இடம்பெயரும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கையிருப்பு உள்ள போதிலும் எதிர்காலத்தில் புதிதாக இடம்பெயர்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது கடினமாகலாம்.

குறிப்பாக உணவு, சுகாதாரம், தங்குமிடம், பொருள்கள் போன்றவற்றிற்கான பாதிப்பு அதிகமாகவுள்ளது.

மேலும் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம் காரணமாக மனிதாபிமான அமைப்புகளின் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவது கடினமாகவுள்ளமையும் கவலையளிக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களைக் குடியமர்த்துவதற்கு 29 இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன.

வவுனியாவின் வடக்குப் பிரிவிலிருந்து 2 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட 10 பாடசாலைகள் ஒட்டுசுட்டானுக்கு இடம்பெயர்ந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஜூன் மாதத்திற்கான உலர் உணவு விநியோகிக்கப்பட்டுள்ள அதேவேளை, கிளிநொச்சிக்கு வழங்கப்படவில்லை.

### குடாநாட்டில் விலை அதிகரிப்பு குறித்து மதிப்பீடு செய்யப்படும்

யாழ். குடாநாட்டில் ஊரடங்கு அமுல் படுத்தப்படும் நேரம் குறித்து நிலவிய குழப்பத்திற்குப் பின்னர் தற்போது 9 மணி முதல் அதிகாலை 4.30 வரை ஊரடங்கு அமுல்படுத்தப் படுகின்றது.

யாழ்ப்பாணத்தில், குறிப்பாக முன்னரங்க காவலரண் அமைந்துள்ள பகுதிகளில் நிலைமை பதற்றமாகவுள்ளது. பரஸ்பர எறிகணை வீச்சுகள் தொடர்கின்றன.

ஜூன் 6 ஆம் திகதி முதல் அங்கு சி.டி.எம்.ஏ.தொலைபேசிகள் இயங்கவில்லை.

யாழ்ப்பாணத்தின் உணவு நிலை, உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு மற்றும் அரச உணவு விநியோக இடைநிறுத்தம் ஆகியன குறித்து உலக உணவுத்திட்டம் மதிபீடொன்றை மேற்கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-சி)

# இந்தியப்படை வந்துவிட்டதா? நாடாளுமன்றில் நேற்றுக் கேள்வி!

கொழும்பு, ஜூலை 10

சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் பாதுகாப்புக்கென இந்தியப் படையினர் ஆயிரத்து 500 பேர் இலங்கைக்கு வந்துள்ளனரா? இல்லையா? என்று அரசு உடன் கூறவேண்டும் என்று ஜே.வி.பி. கேள்வி எழுப்பியது.

நாடாளுமன்றத்தில் நேற்று அக்கட்சியின் எம்.பி. விமல் ரட்ணாயக்கவே இந்தியப் படை தொடர்பாக கேள்வி எழுப்பி னார்.

இலங்கையில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பல நாட்டுத் தலைவர்கள் இங்கு வரவுள்ளனர். அவர்களுள் ஒருவர்தான் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங். அவரின் பாதுகாப்புக்காக இந்தியப் படையினர் 1,500 பேர் கடந்த வாரம் இலங்கை வந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தகவல் உண்மையானதா அல்லது பொய்யானதா என்று அரசு எமக்குத் தெரிவிக்கவேண்டும் என்று அவர் கேட்டார்.

இது தொடர்பாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க வியாழன் அல்லது வெள்ளி நாடாளுமன்றில் பதிலளிப்பார் என்று அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன விமல் ரட்ணாயக்காவிடம் கூறினார். (சி)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டனர் - என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு, பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## மாகாணசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவூத் நியமிக்கப்படவுள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் இருந்து இராஜினாமாச் செய்த ரவூப் ஹக்கீம், ஐக்கிய தேசியக் கடசியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குச் செல்லவுள்ளார்

நாளை வெள்ளிக்கிழமை எம்.பி. பதவியை முறைப்படி ஹக்கீம் ஏற்றுக்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் ஷெல் தாக்குதல்களால் பாடசாலை மாணவர்களின் வரவு குறைவாக உள்ளன. மாணவர்களின் கல்விச் செயற்பாடும் பாதிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது.

அனிச்சியன் குளம் தமிழ் கலவன் பாடசாலையில் 720 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். இப்போது 27 மாணவர்கள் மட்டும் பாடசாலைக்கு வருகை தருகின்றனர். இதுபோன்று யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். மாணவர்கள் நேற்று வருகை தராத நிலையில் 15 ஆசிரியர்கள் மட்டும் பாடசாலைக்கு வந்திருந்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (அ-சி)

## சிலாபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கையின்போது பல வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் பயணிகளும் துருவித்துருவி விசாரிக் கப்பட்டனர் - என்றும் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் கண்டி மற்றும் டன்கொட்டுவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் - அவர்கள் தொடர்ந்து பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுப் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## அரச ஊழியரின் வேலை நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### எரிபொருள் விநியோகம் தடைப்படும்

இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத் தாபனம் இன்றைய வேலை நிறுத்தப்போராட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளதால் நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் தடைப்படவுள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொதுசேவைகள் சங்க ஏற்பாட்டாளர் லக்ஷ்மன் ஆனந்த , தமது தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதால் போக்குவரத்து மற்றும் மின்விநியோக சேவைகளுக்கான எரிபொருள் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனத் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விநியோக நடவடிக்கைகளை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் படம்பிடித்தனர் எனத் தெரிவித்துள்ள அவர்,வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அது வெற்றிபெறவில்லை என்று பின்னர் காண்பிப்பதற்காக அரசு இதனைப் பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### மின்சாரசபை ஊழியர்

இதேவேளை ,வேலைநிறுத்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளவுள்ள இலங்கை மின்சாரசபை ஊழியர் சங்கம், வேலைநிறுத்தப் போராட்டத்தைக் குழப்புவதற்காக அரசு வதந்திகளைப் பரப்புவதாகக் குற்றம்சாட்டியுள்ளது.

சகல வதந்திகளையும் கேட்கக்கூடியதாகவுள்ள தெனத் தெரிவித்துள்ள சங்கத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால்,பணிக்கு வருகை தரும்ஊழியர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுவிட்டுப் பின்னர் தொழிற்சங்கத் தலைவர்கள் மீது பழிபோடுவதற்கும் ஆளும் தரப்பினர் திட்டமிடப்பட்டுள்ளனர் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக வேலைக்கு வரவிரும்பும் ஊழியர்கள் கூட வருகைதர மாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, மின்சார விநியோகம் குழம்பினால் அதனை வழமைக்குக் கொண்டு வருவதற்கு 72 மணித்தியாலங்கள் பிடிக்கும் என ஐக்கிய ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஜி.வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜே.மீகொட அவசர நிலையை எதிர்கொள்வதற்கு அரசு தங்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

### சுகாதாரசேவை, ஆசிரியர்சேவை

அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கப் போவதாகத் தெரிவித்துள்ளதால் சுகாதார சேவை நடவடிக்கைகளும் முடங்கும் சாத்தியமுள்ளது.

எனினும், அவசர சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் தமது சேவையை வழங்கத் தயார் என சுகாதார சேவைகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் காமினி குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அரச படசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் இன்றைய பணிப்பகிஷ்கரிப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

### இ.போ.ச., தனியார் சேவைகள் நடைபெறும்

இது இவ்வாறிக்க இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தைப் புறக்கணிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது.

நாடு இவ்வாறான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு வேறு சில கட்சிகளும் காரணம் எனக் குற்றம் சாட்டியுள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண "நாங்கள் இந்தக் கட்சிகளினதோ அல்லது அரசினதோ கைப்பொம்மைகள் அல்லர், நாங்கள் சுயாதீனமாக முடிவெடுப்பவர்கள்" - எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதில்லை என்று அறிவித்துள்ளனர். (அ-சி)

## எந்த நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிவுகளை விளைவிக்க எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் ஒரு போதும் அரசு வழங்க மாட்டாது.

வாழ்க்கைச் செலவிற்கு நிவாரணம் கோரி முன்னெடுக்கப் படுவதாகக் கூறப்படும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்போது இருவேறு நோக்கங்களுக்காக திசை திருப்பப்பட்டிருக்கின்றன. இது ஓர் அரசியல் நோக்கம் கொண்டதாகும்.

வடக்கில் இருந்து படையினரை தெற்கிற்கு கொண்டு வருவதற்கும், தற்போது வடக்கில் முன்னெடுக்கப்படுகின்ற விடுவிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்தி வேறுபக்கம் திசை திருப்பும் நோக்கம் கொண்டது இந்த வேலை நிறுத்தப் போராட்டம்.

இதற்குப்பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் தமது தனிப்பட்ட நலன்களுக்காக செயல்படுகின்றன என்று நாம் உணர்கின்றோம். - என்றார் ஹெகலிய ரம்புக்வெல்ல.

புதிய பிரிவுகள் ஆரம்பம்....
* Ms Office
* Hardware Technology
* Internet & e-mail
* Desktop Publishing (DTP)
* Programming Courses
* Web Designing
* சிறுவர்களுக்கான KIDS & Games
* பாடசாலை மாணவர்களுக்கான ICT, GIT
SCOT UPGRADE YOUR LIFE
புதிய கணினிகள் கணினி பாகங்கள் கணினி பழுதுபார்த்தல் CD Writting Printing & Scanning எமபணவும் இடம்பெறுகிறது
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் எண்ணிக்கை என்பதால் பதிவுகளை 11-07-2008 ற்கு முன்னர் மேற்கொள்ளவும்.
ஆரம்பம் பிரிவு 1: 12-07-2008
பிரிவு 2: 13-07-2008
விண்ணப்பப் படிவம் கிடைக்குமிடங்கள்
- SCOT Computer Centre -
Katkuly 1st Lane, Post Office Road, Chavakachcheri.
- SCOT Computer Sales & Repair Centre -
Kandy Road, Chavakachcheri.

CHEMISTRY
A/L 2009
Organic Chemistry
Benzene
ஆரம்பம்: 10.07.2008
Thu. - 4.30 p.m.
A/L 2010
புதிய பிரிவு
ஒட்சியேற்றலும் தாழ்த்தலும்
ஆரம்பம்:-11.07.2008
Fri. - 6.30 a.m.
(Tue. Fri. 6.30-7.30 a.m.)
S.Vasu
NAVALAR
Jaffna.

கற்சுமி வெளியீடு
தரம் 9, 11 (O/L)
மாணவர்களுக்குரிய நான்கு பாடங்கள் அடங்கிய வினாத்தாள் புத்தகங்கள்
Gr.-9 Talent
Gr.-11 Target
மாதம் இருமுறை வெளியீடாக ஜூலை மாத இதழ்கள் வெளிவந்துள்ளன.
மாணவர்களை மாகாணமட்ட பரீட்சை G.C.E. O/L பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் வகையில் வெளிவரும்.
(புத்தகசாலைகளில் கிடைக்கும்)
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org